இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

# PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 136 இதழ்: 05 பக்கங்கள்: 08 திகதி 11-03-2012 விலை: 15.00

## கிறிஸ்தவ வாழ்வின் சாராம்சம் பிறரன்பே!

### - தவக்காலச் செய்தியில் திருத்தந்தை -

"அன்பு செலுத்தவும் நற்செயல்கள் புரியவும் ஒருவரையொருவர் தூண்டியெழுப்பக் கருத்தாய் இருப்போமாக". *(எபி.10:24)* என்கின்ற மையப்பொருளில் தனது 2012ம் ஆண்டுக்கான தவக்காலச் செய்தியை வெளியிட்டுள்ள திருத்தந்தை அவர்கள் கிறிஸ்தவ வாழ்வின் சாராம்சம் பிறரன்பே எனக் குறிப்பிட்டு இப்பிறரன்பை நடைமுறைப்படுத்த மிகவும்



சிறந்த காலம் தவக்காலமே என்கிறார்.

இக் காலத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவரும் இறைவேண்டல், பகிர்தல், ஒறுத்தல் என்பவற்றின் மூலம் தனிப்படவும், குழுவாகவும் இறைவனை நோக்கி பயணிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறார்.

அன்பின் சாட்சியத்தை கோரி நிற்கும் இன்றைய உலகில் ஒவ்வொரு கிறிஸ்தவரும் நற்செயல்களால் தம்மை கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கு தயார் பண்ண வேண்டும் எனவும் திருத்தந்தை அழைப்பு விடுக்கிறார்.

## சில்லாலை பங்கில் யாழ். ஆயரின் தவக்கால பங்கு தரிசிப்பு

தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு தினத்தில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் சில்லாலை பங்கிற்கு தமது தவக்கால பங்கு தரிசனத்துக்காக சென்றிருந்தார். காலை 7.00 மணிக்கு ஆயர் தலைமையில திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. ஆயர் அவர்கள் திருப்பலி மறையுரையில் தவக்காலத்தினுடைய முக்கியத்துவத்தையும் மனமாற்றத்தின் அவசியத்தையும் அன்றைய விவிலிய வாசகத்தில் இருந்து விளக்கி உரைத்து தவக்கால செயற்பாடுகளில் செப தப தான தர்மங்களை ஊக்கத்துடன் நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். திருப்பலியின் ஆரம்பத்தில் சிலுவைப்பாதை தியானச் சுருக்கமாக இடம் பெற்றது. திருப்பலியின் முடிவில் ஆயர் திருப்பாலத்துவ சபையினரையும் மறைக்கல்வி மாணவர்களையும் சந்தித்து அறிவுரை வழங்கிய பின்னர் பங்கின் வளர்ச்சியை பற்றியும் கலந்து ஆலோசிததார். அவவேளையில் நற்கருணை பணியாளர்களின் தேவையையும் நாம் எவ்வளவு தகுதி அற்றோராக இருந்தாலும் இறை அழைப்பை ஏற்று இப் பணிக்கு முன்வர வேண்டும் என வலியுறுத்தியதுடன் நற்கருணை பணியாளர்கள் பொது நிலையினர் வளர்ச்சிக்கு ஓர் அடையாளம் எனவும் சுட்டிக் காட்டினார்.

இக் கலந்துரையாடலில் சுழிபுரத்தை சோந்த சில இறை மக்கள் தங்களுக்கோர் ஆலயத்தின் தேவையை ஆயருக்கு நினைவுபடுத்தி தாமும் தமது முழு ஒத்துழைப்பை நல்குவதாக கூறினார்கள். சில்லாலை பங்கின் அனைத்து துணைப் பங்குகளுமாகிய - யாகப்பர் ஆலயம், சங்கானை, மூளாய், சுழிபுரம் மக்களும் இத்திருப்பலியில் கலந்து கொண்டனர்.

## யாழ் கத்தோலிக்க இளையோர் ஒன்றிய ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள் தினம் அனுசரிப்பு

உலகெங்கும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வு நாளாக மார்ச் 8 அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதனை முன்னிட்டு யாழ். மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தின் பெண்கள் பிரிவு இளம்



பெண்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தமர்வு ஒன்றை 11-03-2012 ஞாயிறு அன்று மறைப்பணி நிலையத்தில் நடாத்தியது. ஒன்றியத்தின் செயலாளர் செல்வி. ஆன் நிலுஜா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பல்வேறு பங்குகளிலிருந்தும் 40 வரையான இளம்பெண்கள் கலந்து பயன்பெற்றனர். வளவாளராக கலந்து கொண்ட யாழ் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் திருமதி பப்சி மரியதாசன் பெண்கள் தினத்தின் வரலாறு நோக்கம் என்பவற்றை விளக்கி எமது பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள். தீர்வுகள்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இனிதே நிறைவான கச்சதீவு அந்தோனியாரின் திருவிழா

### இலங்கை - இந்தியாவில் இருந்து 5,000க்கும் மேலான பக்தர்கள்

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் 04-03-2012 அன்று அருட் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. இந்தியா மற்றும் இலங்கையின் பல



வேறு பகுதிகளிலும் இருந்து யாத்திரிகர்கள் வந்து கலந்து கொண்டிருந்தனர்.

5000க்கும் மேற்பட்ட பக்தர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (தொடர்ச்சி 8ம் பக்கம்)

## அக்டோபர் மாதம் நடைபெற உள்ள ஆயர்கள் மாமன்றத்தின் முக்கிய கருப்பொருளாக குடும்பங்கள் அமையும்

இவ்வாண்டு அக்டோபர் மாதம் நடைபெற உள்ள ஆயர்கள் மாமன்றத்தின் முக்கிய கருப்பொருளாக குடும்பங்கள் அமையும் என்று வத்திக்கான் அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஆயர்கள் மாமன்றத்தின் செயற்குழு கடந்த கிழமை வெளியிட்ட ஓர் அறிக்கையில், விசுவாசத்தின் அடிப்படையாக அமைவது குடும்பங்களே என்பதால், இளையோருக்கு விசுவாசத்தைப் பரப்பும் ஒரு முக்கிய கருவியாக குடும்பங்கள் அமைய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

உலகின் பல நாடுகளில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்டுள்ள அருட்பணியாளர்கள், கர்தினால் Francis George தலைமையில் உருவாக்கி வரும் ஒரு முக்கிய கட்டுரை, ஆயர் மன்றத்தின் விவாதங்களுக்கு மையமாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## பருத்தித்துறை மறைகோட்டத்துக்கான அன்பிய வளவாளர் பயிற்சி

பருத்தித்துறை மறைக் கோட்டத்தைச் சேர்ந்த பல்வேறு பங்குகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அன்பிய வளவாளர்களுக்கான பயிற்சி கடந்த மாதம் 17ம்,18ம்,19ம் திகதிகளில் மறைக்கல்வி நிலைய சின்னப்பர் விடுதியில் நடைபெற்றது. முப்பது பேர் வரையில் கலந்துகொண்ட மேற்படி பயிற்சியை அருட்பணியாளர்கள் இருதயதாஸ், இரவிச்சந்திரன் ஆகியோர் நெறிப்படுத்தினர். பங்கேற்கும் திருச்சபை, அன்பியங்கள், 7 படிமுறை நற்செய்திப் பகிர்வு என்பவற்றில் பயிற்சி வழங்கப்பட்டது. பங்குகளில் அன்பியங்களை புதுப்பிப்பது மட்டுமல்லாது

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா தொலைக் காட்சி

தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா தொலைக் காட்சியை யாழ் மாவட்ட L.B.N கேபிள சேவையூடாக வெள்ளி சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.00மணி முதல் 10.00 மணி வரை பார்வையிட முடியும்.

உங்கள் தொலைக் காட்சியை மீண்டும் ஒரு முறை ரியூண் செய்து மேற்படி சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களை சன்ரீவி தொலைக்காட்சி விளம்பரப்பகுதியில் பார்வையிட முடியும். மேலும் 021 7200898, 021 2226085 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும், இல. 891 ஆஸ்பத்திரி வீதி, பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பங்கு நிகழ்வுகளை இச்சேவையின் செய்தியறிக்கையில் இணைத்துக்கொள்ள நேரத்துடன்தொடர்பு கொள்ளுங்கள்.

## மட்டக்களப்பின் அருட்தந்தை சில்வேஸ்ரர் சிறீதரன் காலமானார்

மட்டு. திருமலை மறை மாவட்ட அருட்பணியாளர் சில்வேஸ்ரர் சிறீதரன் காலமானார். போரின் அவலத்தின் மத்தியில் வாழ்ந்த கரித்தாஸ் எகெட் அமைப்பின் இயக்குனராக சிறப்பாக பணியாற்றி துயர் துடைத்து மனித நேய பணியாளராக திகழ்ந்தார். என்பது குறிப்பிடத்தக்கது.



இவரின் பிரிவையொட்டி பாதுகாவலன் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து நிற்கிறது.

# ஏமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

## தவக்காலம்! அதிரடி பாவத் தள்ளுபடி காலம்!

திருநீற்றுப் புதன் அன்று தவக்காலம் முறையாகத் தொடங்கியது. தவக்காலம் வெறுமனே உண்ணா நோன்புக்குரிய காலம் மட்டுமல்ல, மாறாக இறைவனைப் புகழும் காலம். இறைபுகழ் பாடி பரவசமடையும் காலம். மன்றாடி மன்னிப்பு கேட்கும் காலம். தியானித்து தீமைகள் களையும் காலம்.

தவக்காலம் இறைவன் அதிரடியாய் அன்பு மழை பொழிந்து நம் பாவங்களுக்கு அதிரடி தள்ளுபடி வழங்கும் காலம். இப்படி நாம் இறைவனின் அளவற்ற அன்பை அறிந்து, சுவைத்து, கருணையைக் கண்டு, 'இப்படிப்பட்ட இறைவனுக்கெதிராகவா இப்படிப்பட்ட பாவங்களைச் செய்தேன்?' என்று மனம் வருந்தி இறைவனிடம் திரும்பி வரும் காலம்.

இறையருளை மறைக்கும் காரிருளே பாவம். அருள் வாழ்வுக்காக அழைக்கப்பட்ட மனிதனை அருள் வாழ்வின் மதிப்பீடுகளின் படி வாழவிடாமல் தடுப்பது சுயநலம், பற்று, 'நான்' என்ற அகந்தை போன்றவைகள். தன்னை இழக்காத யாரும் 'தன்னை' மறுக்காத யாரும், 'தான்' என்ற அகந்தைக்கு இறக்காத யாரும் கடவுளையோ, அவரது அன்பையோ அறிய, அனுபவிக்க முடியாது.

"பற்றி விடாஅ இருப்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு"

என்கிறார் வள்ளுவர். பற்றுகளைப் பற்றிக்கொண்டு விடாதவர்களை துன்பங்களும் பற்றிக் கொண்டு விடாமல் இருக்கும். பற்றுகளை விட்டுவிடுவதே மாபெரும் கலையாகும். மேலும் வள்ளுவர் தனது 350வது குறளில் உலகப் பற்றுகளை மனிதர்கள் துறக்க வேண்டுமானால் பற்றில்லாத இறைவன்மீது வைத்த பற்றை மட்டும் மனிதர்கள் விட்டுவிடாமல் இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்கிறார். ஆசை என்ற பற்று அளவுக்கு அதிகமானால் மனிதனுக்கு அதுவே நஞ்சாகலாம். தவக்காலம் அருளின் காலம். வாழ்க்கை என்னும் கலையைக் கற்றுக்கொள்ள வாழ்க்கை என்னும் கலையில் உள்ள பற்றுகள் என்ற களைகளைக் களைவோம்.

தவக்காலத்தில் மக்கள் திருப்பயணங்கள் செல்வது வழக்கம். திருத்தந்தை ஆறாம் பவுல் தொடங்கி இரண்டாம் ஜான்பவுல், இப்போது பதினாறாம் ஆசீர்வாதப்பர் தவக்காலங்களில் உரோம் நகரிலுள்ள திருத்தலங்களுக்குப் பயணம் என்று திருப்பலி நிறைவேற்றுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். நாமும் திருயாத்திரைகள் மேற்கொள்வோம். நாம் மேற்கொள்ளும் திருப்பயணங்களில் எல்லாம் சிறந்தது - தவக்காலத்திற்கு உகந்தது தனக்குள் செல்லும் பயணம் (Going into oneself).

தடம் மாறி, பாதை மாறி போய்க்கொண்டுள்ள நம் வாழ்வை மீட்டு, மாற்றிட சுய ஆய்வு செய்து மாற்றி அமைத்திட திருச்சபை தரும் அருளின் காலத்தை நன்றாகப் பயன்படுத்துவோம். இறைவன் உரிய காலத்தில் பதிலளிப்பவர், எப்போதும் துணையிருப்பவர் என்று உறுதிப்படுவோம். மனமாற்றம் பெற்றவர்களாய் கடவுளின் பேரன்பில் திளைக்க எழுந்து நம் தந்தையிடம் போவோம்.

நம்மை அடிமைப்படுத்தியுள்ள பாவ பழக்கவழக்க வாழ்விலிருந்து விடுதலை பெறுவது சாதாரண காரியமல்ல. நாம் அடிமைப்பட்டுள்ள தீய சக்திகளும் எளிமையானதல்ல. தீமையின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிட முடியாது. கடவுளை தேடுகிறவர்களையும், அன்பு செய்பவர்களையும் சோதிக்கிறவன் நம்மைச் சுழற்றி அடிக்க முற்படுவான். இதை பேதுரு தனது முதல் திருமுகத்தில் "உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம் போலத் தேடித்திரிகிறான்" (1பேது 5:8) என்கிறார்.

நீ நல்லவனாக மாறுவதை யாரும் விரும்புவதில்லை. ஒருவன் வித்தியாசப்பட்டு வாழ்வதை முரண்பாடாகப் பார்க்கின்றான் மனிதன். நல்லவன் உலகில் படும் போராட்டங்களை புனித பவுல் "நாம் மனிதர்களோடு மட்டும் போராடுவதில்லை; வான் வெளியிலுள்ள தீய ஆவிகளுடனும் போராடுகின்றோம்" (எபே 6:11,13) என்கிறார்.

செபத்தால், தவத்தால், தர்மத்தால் நம் வாழ்வை சீர்படுத்துவோம். இயேசுவின் கல்வாரிப் பாடுகள் நம் வாழ்வை பரிசுத்தமாக்கட்டும். இந்தத் தவக்காலம் இனிய காலமாக மாற இறைவனின் அன்பிற்குத் திரும்புவோம். பலவிதமான நம் பாவங்களுக்கும் அதிரடியான பாவ மன்னிப்பு தள்ளுபடி பெறுவோம். பாவி அழிவதை அல்ல; பாவி மனம் மாறி மீட்பு பெறுவதையே நம் ஆண்டவர் விரும்புகிறார்.

**அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்**

## பருத்தித்துறை மறைக்கோட்ட வழிபாட்டுக்குழு கருத்தமர்வு

இறைமக்கள் அனைவரும் வழிபாடுகளில் அர்த்தமுள்ள வகையில், ஈடுபாட்டுடன் பங்குபற்றுதல் தொடர்பான ஒரு நாள் கருத்தமர்வினை வழிபாட்டுக்குழுவினர்க்கும், பீட ஆயத்தம் செய்வோர்க்கும், பாடகர்குழாம் பிரதிநிதிகளுக்கும், பருத்தித்துறை மறைக்கோட்ட பங்குகள் இணைந்து நடாத்தினர். இந் நிகழ்வில் சுமார் 150 பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர். ஆலய வழிபாடுகளை அர்த்தமுள்ளவகையில் எவ்வாறு நிறைவேற்றுதல் தொடர்பாக செயல்முறை விளக்கமும், ஆலய பீடங்களில் பூ அலங்காரம், பீட ஆயத்தம் தொடர்பான செயல்முறை விளக்கமும், திருப்பலிக் கொண்டாட்டங்களில் திரு இசை தொடர்பான விளக்கங்களும், புனித வார வழிபாடுகள் தொடர்பான விளக்கங்களும் குருக்களினால் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் றெக்ஸ் சவுந்தரா அடிகளார் கருத்துரை வழங்கினார். மேலும் மறை ஆசிரியர் ஜெயசீலன், ஆசிரியை பூபதி ஆகியோராலும் கருத்துரைகள் வழங்கப்பட்டன. ஏனைய கருத்துரைகள் செல்முறை விளக்கங்கள் அனைத்தும் பருத்தித்துறை மறைக்கோட்ட பங்குத்தந்தையர்களால் முன்னெடுக்கப்பட்டது. மிகவும் பயனுள்ளதாகவும், வழிபாடுகளை அர்த்தமுள்ள வகையிலும் ஆலயங்களில் நிறைவேற்ற ஊக்கம் தருவதாகவும் இக் கருத்தமர்வு அமைந்திருந்தது. இந் நிகழ்வினை அருட்பணி. ஜேம்ஸ்நாதன், அருட்பணி. பத்திநாதர் அடிகளார் முன்னின்று வழிநடத்தினர்.

## யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய புதிய நிர்வாகக் குழு தெரிவு

யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தின் 2012, 2013ம் ஆண்டுகளுக்கான புதிய நிர்வாகக் குழு 26-02-2012 ஞாயிறன்று நடைபெற்ற இவ்வாண்டுக்கான முதலாவது பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது. வெளிச்செல்லும் நிர்வாகக் குழுவின் தலைவர் திரு. தொசாய்ரோ தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த திரு. ஆம்ஸ்ரோங் அருட்பணி. லியோ ஆம்ஸ்ரோங், அருட்பணி. இரவிச்சந்திரன் ஆகியோர் நெறிப்படுத்துனர்களாக கலந்து கொண்டனர். கருத்துப்பகிர்வு, அறிமுகம், கலந்துரையாடல்களைத் தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது. தொடர்ந்து புதிய நிர்வாகிகள் தமது பணிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். வெவ்வேறு பணிப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டோருடைய விபரம் கீழே தரப்படுகிறது.

தலைவர்: A.J. அன்ரனி நிரூபன் : முழங்காவில்

செயலாளர் : S.S. ஆன் நிலுஜா : சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

பொருளாளர் : S. நிருஜன் - பெரியவிளான்

உபதலைவர் : A. பமிலா - நாரந்தனை

உபசெயலாளர் : S. றெஜினோல்ட் : கரவெட்டி.

## வத்திக்கானின் இரகசிய ஆவணங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப் படடுள்ளன

வத்திக்கான் தனது வரலாற்றில் முதன் முறையாக, தனது இரகசிய ஆவணங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட இரகசிய ஆவணங்களைப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்துள்ளது.

வத்திகான் இரகசிய ஆவணக் காப்பகத்தின் 400வது ஆண்டை சிறப்பிக்கும் நோக்கத்தில் உரோம் Capitoline அருங்காட்சியகத்தில் Lux in Arcana என்ற தலைப்பில் இந்த ஆவணக் கண்காட்சி வைக்கப்பட்டுள்ளது.

1521ம் ஆண்டில் திருத்தந்தை 9ம் சிங்கராயர், ஜெர்மன் துறவி மார்டின் லூதரை திருஅவைக்கு புறம்பாக்கியது. 1530ம் ஆண்டில் இங்கிலாந்து மன்னர் எட்டாம் ஹென்றி, திருமண முறிவுக்காக திருத்தந்தை 8ம் கிளமெண்டிடம் விண்ணப்பித்தது, வட அமெரிக்கா இந்தியப் பூர்வீக இனத்தலைவர், ஒரு மரப்பட்டையில் திருத்தந்தை 13ம் சிங்கராயரை செபங்களின் பெரும் போதகர் என எழுதியது உட்பட பல ஆவணங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வத்திக்கானின் ஆவணக்காப்பகத்தில், 8ம் நூற்றாண்டு ஆவணங்கள் உட்பட 35 ஆயிரம் ஆவணங்கள் உள்ளன.

கடந்த பிப்ரவரி 29ம் தேதியன்று திறக்கப்பட்ட இவ்வருங்காட்சியகம் வருகின்ற செப்டம்பர் 9ம் திகதி வரை இருக்கும்.

## மண்டைதீவில் 21 வருடங்களின் பின்பு பொது மக்களின் வீடுகள் முற்றாக விடுவிப்பு

கடந்த கால யுத்தத்தின் போது மண்டைதீவில் பொதுமக்களின் வீடுகள், ஆலயம் என்பன 1991ம் ஆண்டு இராணுவ முகாமாக்கப்படடு 2002ம் ஆண்டு ஏற்பட்ட சமாதான முயற்சியின் போது ஆலயத்தின் ஒரு பகுதியும் வீடுகளில் சிறு பகுதியும் விடுவிக்கப்பட்டது. மீண்டும் நாட்டில் நடைபெற்ற யுத்தத்தினால் பெரும் பகுதியான வீடுகள் கடற்படையினரின் பிரதான முகாமாக்கப்பட்டு இயங்கி வந்ததும் யாவரும் அறிந்ததே. யாழ். மறைமாவட்ட ஆயர் அதி. வந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களும் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் அவர்களும் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு மக்கள் பாவனைக்காக முழுக் கிராமத்தையும் விடுவிக்க வேண்டியதற்கமைய பொதுமக்களின் வீடுகள் முற்றாக பாவனைக்கு விடப்பட்டுள்ளது. எமது மண்ணின் மைந்தன் அருட்பணி. J.B. அன்ரனிதாஸ், எம் பங்குத்தந்தை அருட்பணி. R.G. விஜின்ரஸ் ஆகியோரும் மண்டை தீவுக்கிராம மக்கள் மீள் குடியமர பல வழிகளில் உதவி புரிந்தனர்.

## கனிவான கவனத்திற்கு

ஈஸ்ரர் சிறப்பிதழிற்கான உங்கள் ஆக்கங்களை எதிர்வரும் பங்குனி 15ம் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.

-ஆசிரியர்

# அனைவருக்கும் மறைக்கல்வி

03

(மறைக்கல்வி ஆண்டையொட்டி வெளிவரும் கட்டுரை தொடர்)

## இறைவார்த்தையை வாசிப்பது எப்படி?

இறையனுபவம் இல்லாமல் மறையாசிரியரோ அல்லது பணியாளரோ கற்போரின் உள்ளத்தில் இயேசுவின் மன நிலைகளை உள்வாங்கிக்கொள்ள உதவமுடியாது. இத்தகைய இறையனுபவம் இறைவார்த்தையில் நிலைத்து வாழும் வாழ்க்கையாலே ஏற்படுகின்றது. இறைவார்த்தையில் ஊன்றிய இறையனுபவம் தான் கிறிஸ்தவ மனநிலைகளின்படி வாழக்கேட்போரை தூண்டுகின்றது. எப்படி அருள்வாக்கை வாசித்து சிந்தித்து வாழ்வாக்குவது என்ற கேள்வி இயல்பாக எழுகின்றது. ஒவ்வொரு கற்பிக்கும் பணியாளரும் பின்வரும் படிமுறைகளை முன்னுதாரணமாகக் கொண்டு அருள்வாக்கை கையாள்வதன்மூலம் இறைவார்த்தையின் ஒளியில் இறையனுபவத்தை பெற முடியும்.

### அருள்வாக்கை வாசிப்பது எப்படி?

மறையுரைஞன்

அருள்வாக்கு வாசிப்பின் வழி செபம் செய்யும் முறை பொதுவாக அருள்வாக்கு வாசிப்பின் வழி செபம் ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒருமணி நேரம் நிறைவேற்றப்பட வேண்டிய ஆன்மீக முயற்சி; விவிலிய நூலிலிருந்து ஏதாவது ஒரு பகுதி எடுக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் வாசகப்பகுதி முதலிலேயே அறிவிக்கப்பட்டுவிட வேண்டும். அல்லது விவிலியத்திலுள்ள ஏதாவது ஒரு நூலிலிருந்து தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் ஒரு சிறிய பகுதி எடுக்கப்பட்டு, செப, தியான சிந்தனையுடன் அப்பகுதி வாசித்தறியப்படும். சரியான வழிமுறை என்று பார்த்தால், ஒரு மணி நேரம் தொடர்ந்து இந்த ஆன்மீக முயற்சியை நிறைவேற்றவேண்டும். ஆனால் தொடர்ந்து ஒரு மணி நேரம் என்பது அவ்வளவு எளிதல்ல என்கிற நிலையில் ஒரு மணிநேரத்தை இரண்டாகப் பிரித்து, அதிகாலையில் அரை மணி நேரமும், மாலையில் அரை மணி நேரமும் என்று பிரித்துக் கொள்ளலாம். காலையிலும் மாலையிலும் தேர்ந்தெடுக்கப்படும் நேரத்தை மாற்றாமல் இருப்பது நல்லது. அது ஒரு சிறந்த பழக்கமாக மாறி, நன்றாக செபிப்பதற்கு வழி செய்துகொடுக்கும் என்று நம்பப்படுகிறது. எந்த இடத்தில் இந்த ஆன்ம முயற்சியை நிறைவேற்றலாம் என்கிற கேள்வி எழுகிறபோது, கோவிலில் தான் என்றல்ல, எந்த இடத்தையும் தேர்ந்துகொள்ளலாம். ஆனால் கவனச் சிதைவை ஏற்படுத்தாத இடத்தைத் தேர்வு செய்தல் நன்மை பயக்கும். சிலர் வேறோர் யுக்தியையும் கடைப்பிடிக்கின்றனர். அருள்வாக்கு வாசிப்பு வழி செபத்தைத் தொடங்குவதற்கு முன், திவ்ய நற்கருணைப்பீடத்திற்கு முன் சற்றுநேரம் அமைதியாகச் செபித்து, தங்கள் மனதினை ஒழுங்குபடுத்திய பின், இந்த செப முயற்சியில் ஈடுபடுகின்றனர். அருள்வாக்கு வாசிப்பு வழி செபத்தை நிறைவேற்றுவதற்கு முன் மனத்தை ஒரு நிலைப்படுத்துவது மிக அவசியம். சாதாரண மன நிலையிலிருந்து தியானித்துச் செபிக்கும் மன நிலைக்கு மாற நாம் முயற்சி செய்ய வேண்டும். தூய ஆவியாரை நோக்கி மனதைத்திருப்பி, அவரிடத்தில் செபித்தல் ஒரு சிறந்த முயற்சியாகும். மூச்சை சீராக இழுத்து வெளியிடும் பயிற்சியை மேற்கொண்டு, நம் கவனத்தை ஒருமுகப்படுத்திக் கொள்ளலாம்.

### அருள்வாக்கு வாசிப்பின் செபம் செய்யும் முறையின் நான்கு படிமுறைகள்

மன நிலையைச் சீராக்கி, தியானச் சிந்தனைக்கு வந்தபின், தொடர்ந்து முன் னேறுவதற்கு வாசித்தல் (Lectio), சிந்தித்துத் தியானித்தல் (Meditatio), செபித்தல் (Oratio), ஆழ்நிலை தியானத்தில் ஈடுபடுதல் (Contemplatio) என்று நான்கு படிநிலைகள் தரப்பட்டுள்ளன. அருள் வாக்கு வாசிப்பின் வழி செபத்தை "இறைவார்த்தை விருந்தில் கலந்து கொள்ளுதல்" என்றும் குறிப்பிடலாம். முதல் படிநிலையாகிய வாசித்தலை உணவுப் பதார்த்தைக் கடித்து எடுத்துக்கொள்தல் என்று புரிந்துகொள்ளலாம்: இரண்டாம் படி நிலை, கடித்து எடுத்ததை வாயில் போட்டு மென்று கொள்வதற்கு ஒப்பிடப்படுகிறது. மூன்றாம் படிநிலை, வாயில் வைத்து மெல்லும் போது, மெல்லப்படுவதின் சுவையை உணர்வதோடு ஒப்பிடப்படுகிறது. நான்காம் படிநிலைமென்று உண்ணப்பட்ட பதார்த்தம் ஜீரணமாகி, நம் உடலோடு ஒன்றாகிப்போய் விடுவதற்கு ஒப்பிடப் படுகிறது.

#### *வாசித்தல்*

முதல்படிநிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விவிலியப்பகுதியை மெதுவாகவும் மிகவும் கவனத்துடனும் பல முறை வாசிக்க வேண்டும். விவிலிய பகுதியை வாசிக்கும்போது, அதில் என்ன அடங்கியிருக்கிறது என்பதையும், ஆசிரியர் அந்தப் பகுதியில் என்ன செய்தியை சொல்ல விரும்புகிறார் என்பதையும் புரிந்து கொள்ளலாம். நாம் வாசிக்கும் பகுதியில் ஆசிரியர் என்ன சொல்ல விரும்புகிறார் என்பது மிக முக்கியம். நம் மனதில் எழும் கருத்துக்களை நாம் வாசிக்கும் விவிலியப் பகுதிக்குள் நுழைக்க விரும்புவது சரியான அணுகுமுறையல்ல. இந்த விஷயத்தில் நாம் மிகவும் கவனமாய் இருக்கவேண்டும். விருப்பமானால் வாசிப்பட்ட பகுதியில் நல்ல பொருள் செறிவுள்ள அல்லது நம் மனதைத் தொட்ட முக்கியமான வார்த்தைகள் அல்லது வாக்கியங்களை எழுதி வைத்துக்கொள்ளலாம். நம்மைக் கவர்ந்த வார்த்தைகளை அல்லது வாக்கியங்களை திரும்பத் திரும்ப வாசித்து பார்க்கலாம்.

#### *சிந்தித்துதியானிததல்*

அடுத்த கட்டமாக, இறைவனின் பிரசன்னத்தை உணர்ந்துகொண்டவர்களாய், நம் மனதைத்தொட்ட முக்கியமான வார்த்தைகள் அல்லது வாக்கியங்களை மனதில் அசைப் போட்டுப்பார்க்கலாம். இதில் நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில் நாம் வாசித்துள்ள விவிலியப் பகுதி நமக்குத்தெரிவிக்கும் செய்தி என்ன என்பது குறித்து ஆராய்ந்திட வேண்டும். நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாக, ஆனால் நம்மோடு இணைந்து, அருள் வாக்கு வாசிப்பின் வழி செப முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் குழுவில் ஒருவராக,வாசிக்கப்பட்ட பகுதியில் அடங்கியுள்ள அருமையான கருத்துக்களையும் அக்கருத்துகளிலிருந்து வெளிப்படும் சவால்களையும் மனதில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இம்முயற்சியில் நமக்குத் துணையாக தூய ஆவியார் இருக்கிறார் என்பதை மறந்துவிடக் கூடாது. நம் செப முயற்சியின் இரண்டாம் படி நிலையில் தூயஆவியின் உதவியுடன் நாம் வாசித்துள்ள விவிலியப்பகுதியின் உட்பொருளை அறிந்துகொள்ள நம் மனதினை ஒருமுகப்படுத்தி, தியான நிலையில் இருக்க வேண்டும். தூய ஆவியார் நாம் வாசிக்கும் விவிலியப்பகுதியின் மேல் ஒளியைச் சிந்தி, அதன் அர்த்தத்தை நாம் சரியாகப் புரிந்துகொள்ளச் செய்கிறார். தூய ஆவியார் புதிதாக எதையோ நமக்கு வெளிப்படுத்தப்போகிறார் என்று எதிர்பார்ப்பது அவசியமற்றது. ஆனால் நாம் வாசிக்கும் விவிலியப் பகுதியில் அடங்கியுள்ள இறைவனின் வெளிப்பாட்டின் பொருளை நாம் நன்கு புரிந்து கொள்ள தூய ஆவியார் நமக்கு உதவியாய் வருகிறார்.

#### *செபித்தல்*

முதல் இரண்டு படி நிலைகளில், விவிலியத்தின் மூலம் கடவுள் நமக்குச் செய்தியை வழங்கி, அதன் உட்பொருளை நாம் அறியத் தூண்டுகிறார் என்றறிந்தோம். நமக்குத் தம்மை வெளிப்படுத்தி, இனிய செய்தியை வழங்கும்



இறைவனுக்கு நம் செபத்தின் மூலம் நாம் பதில் தருகிறோம். அதுதான் மூன்றாம் படிநிலையில் நடக்கிறது. நாம் இறைவனிடம் செபிக்கும்போது நமது வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் அவரிடம் சமர்ப்பிக்கிறோம். இறைவனை நெஞ்சாரப் புகழ்ந்து ஆராதித்து வணங்கி அவருக்கு நம் உள்ளங்களைத் திறந்து காட்டி நன்றியைக் காணிக்கையாக்குகிறோம். செபிக்கும் நிலையில் இரண்டு உண்மைகள் வெளிப்படுகின்றன. முதலாவதாக நம் அனைவரையும் தம் அரவணைப்பிற்குள் வைத்துப் பராமரித்து பாதுகாக்கும் எல்லாம் வல்ல இறைவனிடம் நாம் மனம் திறந்து உரையாடுகின்றோம். இந்த உரையாடலில் இறைவனின் அன்பு வெளிப்படுத்தப்படுகிறது. அதேவேளையில் நாமும் நெருக்கமான உறவில் இறைவனோடு இணைகின்றோம். இரண்டாவதாக, செபத்தில் நாம் நம்மையே இறைவனுக்கு மனமுவந்து அர்ப்பணிக்கின்றோம். நம்மை அவருக்கு முழுமனதுடன் அர்ப்பணிக்கும் போது அவரால் நாம் புனிதப்படுத்தப்படுகிறோம். நமது செபத்தில் நம் மனதினைத் தொட்ட விவிலிய வார்த்தைகளும் வாக்கியங்களும் நம் வாழ்வை மாற்றிட அவற்றுடன் நம் முழு ஒத்துழைப்பை நல்கிட முன்வர வேண்டும்.

நமக்கு ஏராளமான கசப்பான அனுபவங்களும் அதிக வேதனை தந்த நிகழ்வுகளும் இருக்கலாம். அவையாவற்றையும் இறைவன் முன்னிலையில் நம் செபத்தின் மூலம் இறக்கிவைப்பது நல்லது. சுமை சுமந்து சோர்ந்து போன நிலையிலுள்ள நம்மை யேசு அன்புடனும் பரிவுடனும் அழைப்பதை *(காண்க. மத். 11:28)* நம் செபத்தில் அறிந்துகொண்டு இறைவனுக்கு பதில் செலுத்தவேண்டும். என் நுகம் அழுத்தாது என் சுமை எளிதாயுள்ளது" *(மத் 11:30)* என்றும் என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது" *(யோவா 15:5)* என்றும் சொல்லி நம்மை அன்புடன் வழிநடத்தித் தேற்றும் யேசுவிடம் நம் செபத்தின் மூலம், எவ்வித நிபந்தனையுமின்றி நம்மை முழுவதும் அர்ப்பணமாக்கிக் கொள்ளவேண்டும். மொத்தத்தில் இறைவனின் இனிய வார்த்தைகள் நம்மை அன்புடன் அரவணைத்துக் கொண்டு நம்மை முற்றிலும் மாற்றிடுமாறு இறைவனிடம் வேண்டி மன்றாடுவதுடன் மூன்றாம் படி நிலை என்று அறியப்படுகிறது.

#### *ஆழ்நிலை தியானித்தல் ஈடுபடுதல்*

நான்காம் படிநிலையில், நம் முழுக்கவனத்தையும் இறைவனிடம் செலுத்துகிறோம். இந்த இறுதி நிலையில், நம் உள்ளத்தின் பள்ளத்தில் இறைவனின் பிரசன்னத்தை நன்றாக உணர்ந்து கொண்டு அமைதியில் அவருடன் ஒன்றாய்க் கலந்து கொள்கிறோம். இந்நிலையில் உயிருள்ள இறைவனுடன் நாம் கலந்துகொண்டு அவரிடமிருந்து இறையருளைக் கொடையாகப் பெற்றுக்கொள்கிறோம். அவர் நமக்கு அருளும் கொடையின் காரணமாக அவரைப்போலவே சிந்திக்கக் கூடியவர்களாயும் எதையும் அவரைப் போலவே புரிந்துகொள்ளக் கூடியவர்களாயும் மாறுகிறோம். மேலும், நம் உள்ளங்களிலும் இதயங்களிலும் நம் வாழ்விலும் இறைவன் எத்தகைய மாற்றத்தை எதிர்பார்க்கிறார் என்பதை "இந்த ஆழ்நிலை தியானம் என்கிற நான்காம் படி நிலையில் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள முற்படலாம். இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று, மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது எது நிறைவானது என்பது உங்களுக்குத் தெளிவாகத்தெரியும்". *(உரோ 12:2)* என்று சொல்லி, புனித பவுல் உரோமையர்களுக்கு அறிவுரை வழங்குவது போல அருள்வாக்கு வாசிப்பின் வழி செப முயற்சியின் நான்காம் படி நிலையில் இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன என்று அறிந்து கொண்டவர்களாய், நல்லதையே தேர்வு செய்து நம் வாழ்வில் இறைவனுக்கு உகந்தவர்களாய் வாழ வேண்டிய அவசியத்தை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

இந்த நான்காம் நிலையில் உண்மையை உள்ளவாறு அறிந்து கொள்ளவும் எதையும் மிகத்தெளிவாகப் பகுத்தறியவும் இறைவன் நமக்கு உதவுவதை நாம் தெரிந்து கொள்ளலாம். அதாவது, புனித பவுல் கூறுவது போல நாம் கிறிஸ்துவின் மனத்தை கொண்டவர்களாய் *(1கொரி 2:16)* வாழ்வதற்கு இந்த நான்காம் நிலையில் நமக்கு உந்துதல் கிடைக்கிறது. எபிரேயருக்கு எழுதப்பெற்ற திருமுகத்தின் ஆசிரியர் குறிப்பிடுவது போல நாம் எதையும் நுணுக்கமாக 'ஆராய்ந்து மிகத்தெளிவுடன் தேர்ந்து கொள்ள' இறைவார்த்தை எவ்வளவு புரிந்துகொள்ளும் தருணம்தான் இந்த நான்காம் நிலை அருள்வாக்கு வாசிப்பின் வழி செபம் வெறுமனே ஆழ்நிலை தியானத்தோடு முடிவடைந்து விடாது. ஆழ்நிலை தியானத்தில் நாம் அறிந்து கொண்டவற்றை நம் செயலின் மூலம் நிறைவேற்றி, நம் வாழ்வையே பிறருக்கு அன்புச் சேவையின் மூலம் வழங்குவதில்தான் இந்த ஆன்மீக முயற்சி நிறைவு பெறுகிறது என்று திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற் கூறுகின்றார்.

(கற்றல் தொடரும்)

# உன்னையே நீ அறிவாய்

மனித சிந்தனைதான் விஞ்ஞான வளர்ச்சிகளுக்கும் அவற்றின் கோட்பாடுகளுக்கும் காரண கர்த்தாவாக விளங்குகின்றது. மனிதனில் காணப்படும் பல்வேறு இயல்புகளில் ஒன்றாகவே ஆளுமைகள் காணப்படுகின்றன. நாம் ஒவ்வொருவரும் வெறும் மண்கற்கள் அல்ல. "சிந்தனை வளம் மிக்க மேதைகளே" என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாம் மேற்கொள்ளவிருக்கும் எந்தவொரு வேலைப்பாடுகளும் எங்களது விருப்பு வெறுப்புக்களிலே அமைந்து காணப்படுகின்றது. உதாரணமாக இன்று உலக நாடுகளில் முன்னேற்றத்திறன் எங்களுடைய நாட்டை விட எவ்வளவு பெரிதாக அமைந்து காணப்படுகின்றது என நாம் வியப்பில் ஆழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் அதுவும் எங்களுடைய விருப்பு வெறுப்புக்களில்தான் தங்கியுள்ளது என நாம் ஒருபோதும் நினைத்து பார்ப்பதே இல்லை.

எங்களுடைய விருப்புக்களுடன் விடாத உழைப்பும் இருந்தால் இந்த உலகத்தையே எம்மால் மாற்றி அமைக்க முடியும்.

"மனித உழைப்பு 99% வீதமாகவும் இயற்கை திறன் 1% வீதமாகவும் இருந்தால் மனிதன் உச்சகட்ட பயனை அடைந்து கொள்ளலாம்" என்று தத்துவ ஞானியான "ஐன்ஸ்ரைன்" எடுத்துரைத்திருக்கின்றார் என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். இதை எம்மில் ஒரு சிலர் மாத்திரமே அனுபவித்து கொண்டிருக்கின்றார்கள்.

மனித வாழ்க்கையானது போட்டிகளும் சவால்களும் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. ஆகவே நாமும் அதற்கேற்ற வகையில் எங்களை அமைத்து கொள்ள வேண்டும். இதற்கு மனித ஆளுமை வளர்ச்சியானது மிக முக்கிய இடம் வகிக்கின்றது. மனிதனும் மனித சூழ்நிலையும் இணைந்து அமைந்த முழு நிலையே மனித ஆளுமையாகும்.

நாம் ஒவ்வொருவரும் எவ்வகை சார்ந்தவர்கள் என எண்ண வேண்டும். உதாரணமாக நாம் ஒரு பரிசளிப்பு விழாவிற்கு செல்கின்றோம் என கொள்வோம். அங்கு ஒரு சிற்பியால் செதுக்கப்பட்ட ஒரு பெண் சிலைக்கு முதலிடம் கிடைக்கப் பெறுகின்றது. செதுக்கிய சிற்பிக்கு விருதும் பாராட்டுக்களும் வழங்குவதற்காக மேடைக்கு அழைக்கப்படும் போது அவனை வாழ்த்துவது உண்மையாக எங்களுடைய கடமை மட்டும் அல்ல. அதுதான் மனித மாண்பும் கூட. ஆனால் ஏன் எங்களாலும் அந்த அழகிய சிற்பத்தை செதுக்கமுடியவில்லை என நாம் எண்ணிப் பார்க்கின்றோமா? இதுதான் நாம் விடும் முதலாவது தவறு. எங்களுடைய எல்லா செயற்பாடுகளும் ஆழ்ந்த சிந்தனைகளின் மூலமே அது சிறந்த செயலாக மாற்றப்படுகின்றது. இதை எங்களுடைய மனங்களிலே நிலை நிறுத்தி கொள்ளவோமாயின் நாளைய வாழ்விலே உயர்ந்த இலக்குடையவர்களாக மாற்றம் பெற்றிடுவோம்.

எங்களுடைய சிந்தனைகளும் எண்ண முனைப்புகளும் உயர்ந்த நோக்கமுடையதாக காணப்பட வேண்டும். நாம் எங்களுடைய எல்லா எண்ணங்களையும் கண்காணிப்பது என்பது இயலாத காரியமாகும். ஏனெனில் ஒரு நாளைக்கு ஒரு சராசரி மனிதனின் மனதில் 60000 எண்ணங்கள் ஓடுகின்றன. அவ் எண்ணங்களே உணர்வுகளையும் தோற்றுவிக்கின்றன. எங்களுடைய எண்ணங்களின் எண்ணிக்கை 60000 இருந்தாலும் எங்களால் வெளிக்காட்டப்படும் உணர்வுகளின் அடிப்படையில் எங்களின் எண்ணங்களை இனம் கண்டு கொள்ளலாம். ஏனெனில் எண்ணங்களே உணர்வுகளையும் தோற்றுவிக்கின்றன.

நாம் எங்களுடைய உணர்வுகளை அவதானிக்கின்ற பொழுது எங்களுடைய எண்ணங்களையும் அறிந்து கொள்ளலாம். உதாரணமாக ஒரு சாதாரண இளைஞனின் வாழ்க்கைமுறையை எடுத்து பார்போமாயின் கட்டாயம் அவனது உள்ளத்தில் உயர்ந்த ஒரு எண்ணச்சித்திரம் வரைந்து காணப்படும் அது கெட்டவையோ அல்லது நல்லவையோ எதுவானாலும் அவனது மனங்களில் புதைந்து கிடக்கும் அனைத்தும் அவனுடைய செயற்பாடுகளிலோ அல்லது உணர்வுகளிலோ வெளிப்பட்டு நிற்கும்.

எங்களுடைய எண்ணங்கள் சிந்தனைகளை சீர்ப்படுத்தி கொள்ளுதல் வேண்டும். இதன் வழியாக நல்ல ஆழுமை அமைதி கிடைக்கும். எங்களுடைய மனதானது எவ்வளவிற்கு அமைதி கொள்கின்றதோ அவ்வளவிற்கு எங்களுடைய ஆளுமை வளர்ச்சியும் உயர்வாகவே காணப்படும். ஒரு மனிதன் சீரான சிந்தனை மிக்கவனாக காணப்படுவானாயின் அவன் உயர்ந்த ஆளுமை வளம் பெற்றவனாக காணப்படுகிறான்.

எங்களுடைய ஆளுமைகள் ஒவ்வொன்றும் எங்களுடைய கையில்தான் உள்ளது. மனித வாழ்க்கையில் நாளாந்தம் எத்தனையோ இறப்புக்களை கண்களால் காண்கின்றோம். இறக்கும் ஒவ்வொரு உயிரும் எதை கொணர்ந்தது? எதைக் கொண்டு செல்கின்றது. பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தன் பிறப்பின் மகிமையை வாழும் போதே உணர்கின்றான். இந்த வகை உணர்தலுக்கு மனித ஆளுமைகளே ஊட்டம் கொடுக்கின்றன. எனவே தான் வாழும்போது ஆளுமைக்கேற்ப வாழ்ந்து மடிகின்ற ஒவ்வொரு மகான்களையும் உலகம் பின் தொடர முயற்சிக்கின்றது.

ஒவ்வொரு மனிதனும் மண்ணில் வாழும் போது ஒவ்வொரு இலட்சியங்களை பற்றிக் கொள்கின்றான். அந்த இலட்சியங்கள் தான் அவனை தன்னிடம் ஆளுமை உள்ளதா என தேட செய்கின்றது. இலட்சியம் அற்றவனுக்கு உலகம் ஒரு பட்டம் கொடுக்கும். அதுதான் "மூடன்" என்ற பட்டம் இப்படிப் பட்டவர்கள் ஆளுமை அற்றவர்களாக தன்னம்பிக்கை அற்றவர்களாக காணப்படுவார்கள்.

எந்த ஒரு மனித தன்னம்பிக்கை அற்ற ஒரு வாழ்க்கை வாழ்கின்றானோ அவனே சோதனைகளுக்கும் தோல்விகளுக்கும் சொந்தக்காரனாகி விடுகின்றான். தன்னை தாழ்மையாக எண்ணி தனக்குள் ஆளுமை என்பதே இல்லை என்று நினைக்கும் ஒவ்வொருவனும் தனக்குள் ஒவ்வொரு மாணிக்கங்களையும் "சிப்பி மூடிய பவளங்களைப் போல" வைத்திருக்கின்றான். இதை அவன் இனம்கண்டு தன்னை வளர்த்து கொள்ளுவானாயின் அவனே மிகப் பெரிய மேதையாவான். எங்களிடம் தன்னம்பிக்கைகளை வளர்க்குமிடத்து நாமே எம்மை பார்த்து வியக்கத்தக்க ஆளுமைகளை எம்மில் கண்டுணரலாம். எங்களுடைய வாழ்விலே வரும் வெற்றியையும் தோல்வியையும் நிர்ணயிப்பது ஆளுமைகளும் எங்களில் காணப்படும் தன்னம்பிக்கையுமே என நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆக்கம் : M.P. ஜதீஸ்குமார்
(12 கலை)
புனித பத்திரிசியார் கல்லூரி

## பருத்தித்துறை மறைக்கோட்ட இளையோருக்கான தவக்கால தியானமும் நெறிப்படுத்தலும்



தவக்காலத்தை முன்னிட்டு பருத்தித்துறை மறைக்கோட்ட இளையோரை ஒன்றிணைத்து தவக்கால தியானமும் நெறிப்படுத்தலும் எனும் கருப்பொருளில் புலோலி சூசையப்பர் ஆலயத்தில் 03-03-2012 அன்று காலை 9.30 - 4.00மணி வரை இடம்பெற்றது.

யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய இயக்குனர் இ.ம.வி. இரவிச்சந்திரன் அவர்கள் வளவாளராக கலந்து கொணடார். இந்நிகழ்வில் பருத்தித் துறை மறைக்கோட்ட அருட் தநதையர்களும், அருட் சகோதரன், மறையாசிரியர் ஜெய சீலன் வளவாளர் ஆசிரியர் கெனத், ஆசிரியை திருமதி கெனத் அவர்களும் கலந்து கொண்டனர். இவர்களுடன் யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இளையோருக்கான நற்கருணை ஆராதனை வழிபாடு இடம் பெற்றது. இதனிடையே ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. இதில் ஏராளமான இளையோர் அருட்சாதனம் பெற்றனர்.

தொடர்ந்து யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய மூன்று ஆண்டு கால இலக்கான "பண்பாட்டு பாதையில் புத்துலகு நோக்கி....." எனும் செயற்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)


## நீங்கா நினைவில் 31ம் நாள்



அமரர். மகா தேவன் பிலோமினா

மண்ணில்
08-02-1936

விண்ணில்
09-02-2012

"ஆண்டவருக்குள் இருப்பவர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர் செய்த நன்மைகளே அவர்களைப் பின் தொடரும்"
(திவெளி. 14:13)

சீவியத்தில் நேசித்தோம்
மரணத்தில் மறவோம்
இறைவனில் இளைப்பாற என்றும் வேண்டுவோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், மகன், மருமகள், பேரன், சகோதரர், மருமக்கள், உறவினர்.

கோவிந்தபுலம்
இளவாலை.

Add: 23/12

## நீங்காத நினைவுகளில்...14ம் ஆண்டு

மண் மகிழ
11-06-1973

விண் மகிழ
11-03-1998

திருமதி யோ. றொமின் அன்ரனீற்றா



"உம் அருள் நலமும் பேரன்பும் என்னை புடை சூழ்ந்து வரும். நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்"
தி.பா 23:6

உன்னதத்தில் அமைதியில்
மகிழ்பவளே
நாளும் உம் நினைவில் வாழ்கிறோம்
நித்திய ஒளியில் – நாமும்
ஒரு நாள் சந்திப்போம்...
ஒன்றாய் மகிழ்வோம்.

128, கொழும்புத்துறை வீதி,
பண்டியன்தாழ்வு

Add: 28/12

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## 10ம் ஆண்டு நினைவலைகள்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 | 21 |
| 06 | 03 |
| 1924 | 2002 |



அமரர்: கொன்சன்ரையின் அந்தோனிமுத்து

இரக்கம் நிறைந்த இறைவா திருமுழுக்கு வழியாக உமது பிள்ளையாக தெரிந்து கொண்ட அமரர் கொன்சன்ரையின் அந்தோனிமுத்து எனும் அடியான் தாம் வாழ்ந்த காலத்தில் தெரிந்தும் தெரியாமலும் கட்டிக்கொண்ட பாவங்களை மன்னித்து உமது பேரின்ப வீட்டில் நித்தம் புகழ் பாட செய்வீராக.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
15-01-1913

விண்ணில்
10-03-2011

சீவியத்தில் நேசித்தோம்
மரணத்தில் மறவோம்.
இறைவனில் இளைப்பாற என்று
வேண்டுவோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.



அமரர்: பிலிப்பு றோசம்மா

தவசிகுளம்
மிருசுவில்.

Add: 25/12

# ஊருக்காகக் கொடுத்தார்

அருட்பணி. அமிர்தராச சுந்தர்

**முன்னுரை:**

ஆண்டுக்கு ஒரு முறை வந்து போகின்ற ஒரு சடங்காக இந்த தவக் காலம் அமைந்து விடுமேயானால், அதனால் யாருக்கு எந்த பயன்? வெத்துச் சடங்கும், வீணான வழிபாடும் நம்மை புனிதப்படுத்திடப் போவதில்லை. அர்த்தமுள்ள வழிபாடாக ஆக்குவதுவும், வாழ் நாளை அர்த்தமுள்ளதாக்குவதுவும் நம்முடைய கரங்களில் தான் உள்ளன.

இந்த ஆண்டு தவக்காலத்தை வாழும் திருத்தந்தை அர்த்தமுள்ளதாக்க தர்மம் செய்யுங்கள். மறைவாயுள்ளதை காணும் உங்களது தந்தையும் உங்களுக்கு பிரதிபலன் அளிப்பார். என்கிற சிந்தனையில் சிந்திக்க அழைக்கிறார். கொடுங்கள். அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி கொடுங்கள். உங்களுக்கும் கொடுக்கப்படும். எந்த அளவையால் நாம் அளக்கிறோமோ, அதே அளவையால் நமக்கும் அளக்கப்படும் என்றுரைத்தார் நம் ஆண்டவர். எனவே அதே மனநிலையோடு சிந்திக்க தியானிக்க முன் வருவோம்.

அற்புதமான பயணம் இது. கொடுத்ததெல்லாம் கொடுத்தார். யாருக்காக கொடுத்தார். இல்லை ஊருக்காக கொடுத்தார். தம் வாழ்வையே கொடுத்தார். எல்லாரும் வாழ்வு பெறும்படி தம் வாழ்வையே கொடுத்தார். பதினான்கு நிலைகள் சிந்திக்க தூண்டும் அற்புதமான நிலைகள். தம்மையே முழுவதுமாக கொடுத்திட்ட நம் ஆண்டவரின் பாடுகளை தியானிக்க தகுந்த நேரமிது. நம்மையும் கொடுக்க தூண்டும் நிலைகளை தியானிப்போம். வாழ்வாக்கும் அருளை கேட்போம். கொடுப்பதில் நம்முடைய பேறுடைமையை காட்டுவோம்.

## முதல் நிலை: நல்ல தீர்ப்பு கொடுப்போம்

நானும் உனக்கு தீர்ப்பு தரவில்லை. சமாதானமாக போ. (யோ 08)

மனிதனை படைத்த இறைவன் நல்லது எனக்கண்டார். எல்லா மனிதர்களுமே மண்ணில் பிறந்த யாவருமே நல்லவர்களே. அவர்களது வளர்ப்பில் தான் உள்ளது என்றான் கவிஞன். மற்றவர்களில் உள்ள நல்லவைகளை காணும் மனிதன், தானும் நல்லவனாகி, மற்றவர்களையும் நல்லவனாக்குகிறான் என்பதுமே உண்மை. நல்ல சமூகம் படைக்க விரும்பும் எந்த மனிதனும் தன்னிலே நல்லதை காணவும், பிறரிலே நல்லதைக் காணவும் கடமைப்பட்டிருக்கிறான். நல்லதை காணும் எந்த மனிதரும் தான் வாழும் சமூகத்திற்கு நல்லது செய்கிறான். இருளை பழிப்பதற்கு மாறாக ஒளியையேற்றுவது என்பது இதுதான்.

இவள் பாவி என்ற குற்றம் சுமத்தி, மோசேயின் சட்டத்தை சுட்டிக் காட்டி கல்லால் எறிந்து கொல்ல கொண்டு வந்த பெண்ணை கொடூரர்கள் கையில் கொடுப்பதுவோ தவறான தீர்ப்பினை கொடுத்து கொடூரமான கொலைக்கு கையளித்து தன் கையை கழுவுகிறான்.

தியானிபபோம். மனிதரில் காணும் நல்லவைகளை பெருந்தன்மையான மனப்பாங்கோடு கண்டு அவர்களை ஊக்கப்படுத்திட மனமுவந்து நல்ல தீர்ப்பினையே இனிவரும் காலங்களில் கொடுப்போம் என்ற உறுதியை ஏற்போம்.

## இரண்டாம் நிலை: தோள் கொடுப்போம்.

ஒருவர் ஒருவரது சுமைகளை தாங்கிக் கொள்ளுங்கள்.

தள்ளாடி வரும் மனிதர்கள் தரணியிலே இன்று பலர் உண்டு. பல காரணங்களுக்காய் தள்ளாடுவோர் நம்மில் பலர் உண்டு. அது கொழுப்பு. அது அவன் தலையெழுத்து. அது எங்க முன்னேற போகுது. என்றெல்லாம் நாம் பேசி வாடுவோருக்கு மேலும் சாட்டையடி நாம் கொடுப்பவர்களாய் இல்லாமல், அழுவாரோடு அழுங்கள் என்ற வாக்கினையேற்று நாம், அவர்களது சுமைகளை தாங்கிட தோள் கொடுப் போமேயானால், அது தான் இன்றைய கால கட்டத்திற்கு நாம் செய்யும் உயர்ந்த சேவையாகிட முடியும்.

இன்று பல முதியவர்கள் கூட தங்களது தள்ளாத வயதிலும், தடுமாற்றத்திலும் தாங்கள் உழைத்துத் தான், தங்களது வயிற்றைக் கழுவிக் கொள்ள வேண்டிய நிலை நம் பாரதத்தில் பலருக்கு உண்டு. அவர்களை பார்க்கும் பொழுதெல்லாம் விறகு சுமந்து, வண்டியிழுத்து, வீடுகளில் பாத்திரங்களை கழுவி, குப்பைகளை அள்ளியெடுத்து உழைப்பதை பார்க்கும் பொழுது. இந்த தள்ளாடும் மனிதர்களுக்கு நாம் என்று தோள் கொடுக்க போகிறோம்.

இயேசு நம் பாவங்களுக்கு அடையாளமான சுமையாகிய சிலுவையை சுமக்க தோள் கொடுக்கிறார். நம்முடைய பாரங்களை இறக்கி வைக்க அவர் தன் தோள் கொடுக்கிறார். ஏசாயாவில் கூறும் போது மெய்யாகவே அவர் நம் பிணிகளை ஏற்றுக் கொண்டார; நம்முடைய நோய்களைச் சுமந்து கொண்டார் என்கிறார். இத்தகையவராகவே அவர் மண்ணுலகில் மனிதரானார்.

## மூன்றாம் நிலை: நம்பிக்கையைக் கொடுப்போம்

தளர்ந்து போன கைகளை திடப்படுத்துங்கள்.

தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள்.

அவநம்பிக்கையிலே இந்த தரணி இன்று வாடுகிறது. எல்லாம் வீணிலும் வீண் என்ற எண்ணத்திலே இன்று வாழ பிடிக்காது மண்ணிலே வாழ்வோர் இன்னும் உலகில் வாழ வேண்டும் என்ற கேள்வியை கேட்டு, பயனற்று கிடப்போர் எண்ணிக்கை இன்று அதிகமாகி கொண்டே இருக்கிறது. காலத்தை இன்று மனிதன் வென்றெடுத்தாலும், காட்சியை இன்று கையடக்க பெட்டிக்குள் கொணர்ந்து விட்டாலும், கேளிக்கைகள் கோமாளித்தனங்கள் இன்று கொடி கட்டி சென்றிருக்கிறது என்பது தான் உண்மை.

நம்மை படைத்தவர். நம்மை வாழச் செய்பவர். நம்மை வழிநடத்துபவர், நம்மை நம்பிக்கையின் நட்சத்திரங்களாக வாழவே அழைக்கிறார். மனிதன் வீழ்ந்தாலும், எழுந்து நடக்கின்றார். இலட்சியத்தின் பயணம் இது. இடர்கள், இடர்பாடுகள், நம்மை வீழ்த்தினாலும், எழுந்து நடக்கின்றார். இலட்சியத்தின் பயணம் இது. இடர்கள், இடர்பாடுகள், நம்மை வீழ்த்தினாலும், எழுவது தான் மனித வாழ்வு. நம்மிடையே இலட்சியத்தின் குறிக்கோள் தெளிவு இருக்குமாயின் நாம் நம்பிக்கையை ஊட்டி மற்றவர்களை, வீழ்ந்து கிடப்போரை எழுப்பி விட நம்மை பணிக்கின்றார். வாழ வழி தெரியாது சமூகத்தின் விளிம்புக்கு தள்ளப்பட்ட மாந்தர்களை சந்தித்து நம்பிக்கையினை கொடுத்து வாழ அழைக்கின்றார். எல்லா தரப்பட்ட மாந்தரும் ஒருங்கிணைந்து வாழ முன் வர வேண்டும். அதுவே இறையாட்சி என அறிவிக்கின்றார்.

## நான்காம் நிலை: சுத்தமான பார்வையைக் கொடுப்போம்

இச்சையோடு நோக்குபவன் ஏற்கனவே பாவம் செய்தவனாகிறான்.

இயேசுவின் பார்வை பலருக்கு வாழ்வு தந்தது. பலருடைய பாவங்களை போக்கியது. பலரை வாழ செய்தது. பார்வைக்கு சக்தியுண்டு. பார்வையால் பலநூறு காரியங்களை பரிமாற முடியும். நல்லவைகளையும், தீயவைகளையும் பரிமாற முடியும். அன்னை மரியின் பார்வை இங்கு மகனுக்கு சத்தாக இருந்தது. பாதையின் களைப்பில் சோர்வு தட்டினாலும், தாயின் பார்வையால் தன்னுடைய இலட்சிய தெளிவு பெற்றார் மகன் இயேசு. தாயுக்கும் இயேசுவின் பார்வையால் சக்தி பிறந்தது. மகனை அவமானப்படுத்தி இழுத்துச் செல்லும் காட்சியை பார்க்கும் தாயுக்கும் கொடூர வேதனை. வாள் உள்ளத்தை ஊடுருவியது. மனத்தில் இருத்தி அமைதி காக்கிறாள். சொல்லி அழ முடியாத துயர் வருத்திய வேளையில், மகனின் பார்வை தாயின் இருதயத்திற்கு மருந்திட்டது போலாகிறது.

இவன் பார்வையே சரியில்லையே. திருதிருன்னு முழிக்கிறத பார்த்தா இவன் ஏதோ தப்பு பண்ணியிருப்பான்னு நினைக்கிறேன். இவங்க பார்வையே சந்தோசமாக இருக்கு. என்ன ஒரு கனிவான பார்வை, அவங்க பார்வை, நம்முடைய பார்வை எந்த ரகத்தைச் சார்ந்தது. நாமும் நல்ல, சத்தான பார்வையை கொடுத்திட முடியும். அள்ளி கொடுக்க இயலாத நிலையிலும் வாரியிறைக்க வழியில்லாத நிலையிலும், பேதுருவின் பார்வை கோயிலுக்கு முன்பாக இருந்த பிச்சைக்காரனுக்கு வாழ்வு தந்தது. இயேசுவின் நாமத்தில் உனக்கு நான் சொல்லுகிறேன் எழுந்து நட என்றார். அவனோ நடந்தான்.

## ஐந்தாம் நிலை: கரம் கொடுப்போம்

பார்வையில்லாதோர் பார்வையற்றவருக்கு கரம் கொடுத்திட இயலாது. பார்வையுள்ளோரே கரம் கொடுத்திட இயலும்.

சிமியோன் கட்டாயத்தின் பேரால் உதவி செய்தாரா இல்லையா என்பது நம்முடைய கேள்வியில்லை. வயலில் இருந்து திரும்பி வந்த மனிதரை பிடித்து உதவிட செய்தார்கள். அவருடைய செயல் நினைவு கூரப்படுகிறது. மனமுவந்து செய்யப்படுகின்ற காரியங்கள் போற்றத்தக்கது தான். ஆனால் சில வேளைகள் கட்டாயத்தின் பேராலும் செய்யப்படுகின்ற காரியங்கள் போற்றப்படுகின்றன.

அவரு என்ன பெரிசா செய்திட்டார். சம்பளம் வாங்காமலா செய்தார். சம்பளம் வாங்கிட்டு தானே செய்கிறார். சிலர் சம்பளம் வாங்கினாலும், கடமையென்றாலும் செய்ய வேண்டியதை செய்யாமல் இருக்கும் போது, கட்டாயத்தின் பேரால் செய்யப்படுகின்ற காரியங்கள் உயர்வானது தான். பெற்ற பிள்ளைகளை கைவிடுகின்ற பெற்றோர் உண்டே, கைபிடித்திட்ட அன்பர்களை உதறித் தள்ளுகின்ற ஆன்மாக்களை என்னவென்று சொல்லுவது. கரம் கொடுத்து வாழ்த்து சொல்லும் நண்பர்களை, கைகழுவுகின்ற துரோகிகளை எந்த கணக்கில் சேர்ப்பது. ஆபத்தில், தேவையில் கரம் கொடுத்திட்ட நல்லவர்களை நன்றி மறக்கும் மனம் இல்லாத மனிதக் கூட்டத்தை எப்படி அழைப்பது. இரு கரம் தந்த தேவன் கரம் பிடித்து நம்மை வாழ்வில் தூக்கி விடவில்லையா?

## ஆறாம் நிலை: கரிசனையைக் கொடுத்திடுவோம்

உங்கள் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பது போல, நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருந்திடுங்கள்.

அழும் தாயின் மடியில் கிடக்கும் பிஞ்சுக்குழந்தை தன் பிஞ்சுக்கரங்களால் தாயின் கண்ணீரை துடைக்க சொல்லித் தந்தது யார்? கரிசனை என்பது வாழ்வில் நம்மோடு கூடப் பிறந்த ஒன்று என்பதை ஒத்துக் கொள்வோமோ. பள்ளியில் பெறாதது, சந்தையில் வாங்க இயலாதது. நம்மோடு ஒட்டிப் பிறந்தது கரிசனை. எந்த கல் நெஞ்சக்காரருக்கும் உண்டு கரிசனை.

நம் வாழ்வினை சோகத்தில் நாம் பெறுவது, பிறரின் கரிசனையை நோயின் படுக்கையில் தாயின் கரிசனைக்கு எது ஈடாக முடியும். தந்தையின் கரிசனையில் நம் வாழ்வில் எத்தனை மாற்றங்களை பெற்றிருக்கிறோம். உடன் பிறந்தாரின் கரிசனையில் தான் எத்தனை சுகம் உண்டு. நண்பர்களின் கரிசனையில் எத்தனைமுறை நாம் புத்துயிர் பெற்றது உண்டு. இவற்றிக்கெல்லாம் என்ன கைம்மாறு செய்திட போகிறோம்.

கூடத்தின் இடிபாடுகளிலும், போர் வீரர்களின் மனிதாபிமானமற்ற செயல்களின் மத்தியிலும் தன் கரிசனையை காட்ட முற்பட்ட இந்த பெண்ணின் வீரத்தை போற்றிக் கொண்டே. நம்முடைய கரிசனையையும் தேவையில் உள்ளோருக்கு காட்ட முன் வருவோமா. இரக்கமுடையோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் தான் இரக்கம் பெறுவர். என்பது இறைமொழி.

## ஏழாம் நிலை: பலன் கொடுப்போம்

கோதுமை மணி மண்ணில் விழுந்தால் நான் மிகுந்த பலன் கொடுக்கும்.

நெற்றி வெயர்வை நிலத்தில் சிந்த பாடுபட்டு உழைக்க வேண்டும் கடவுள் பணித்தது. மனிதனின் நியதி

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## சிந்திக்க ஓர் சித்திரம்

**நாற்பது நாட்களும் நாம் மரக்கறி சாப்பாடு தான்!**




ச. சுலோச்சனா

**ஊருக்காக......(5ம் பக்கத் தொடர்ச்சி)**

இது. படைக்கப்பட்ட எல்லாம் படைத்தவருக்கு பலன் கொடுக்க வேண்டும். பெற்ற பிள்ளை தனக்கு பலன் கொடுக்க நினைப்பது மனிதனின் எதிர்பார்ப்பு.

**ஏழாம் நிலை: பலன் கொடுப்போம்.**

கோதுமை மணி மண்ணில் விழுந்தால் தான் மிகுந்த பலன் கொடுக்கும்.

நெற்றி வெயர்வை நிலத்தில் சிந்த பாடுபட்டு உழைக்க வேண்டும் கடவுள் பணித்தது. மனிதனின் நியதி இது. படைக்கப்பட்ட எல்லாம் படைத்தவருக்கு பலன் கொடுக்க வேண்டும். பெற்ற பிள்ளை தனக்கு பலன் கொடுக்க நினைப்பது மனிதனின் எதிர்ப்பார்ப்பு. பலன் கொடுத்திட நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த பாடுபட வேண்டும். பாடுபடுதல் என்பது இன்றைக்கு பைத்தியக்காரத்தனமாக அமைந்து இருக்கிறது. கடின உழைப்பு என்பது ஏதோ வேண்டாத செயல் போல கருதப்பட்டுக் கொண்டு வருகிறது. உழைக்க மனம் இல்லாதவன் உண்ணலாகாது என்றார் பவுல் அடிகளார். இன்றைக்கு உழைக்க விரும்பாத மனிதன். என்ன செய்தாகிலும் பணம் ஈட்டி பெரும் பணக்காரர் ஆகி விட வேண்டும். உயர நினைப்பது தவறில்லை. ஆனால் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். எப்படி வேண்டுமானாலும் சம்பாத்தியம் பண்ணிக் கொள்ளலாம் என நேர்மையான வாழ்வை தொலைத்த மனித கூட்டமாக மாறி வருகிறோம் என்பது வாழ்வின் நடைமுறையாகி வருகிறது.

*சீராக் ஆகமம் 07:15* சொல்லுகிறது. கடும் உழைப்பையும், உழவுத் தொழிலையும் வெறுக்காதே. கிராமத்தின் வளர்ச்சியில் தான் பாரதத்தின் முன்னேற்றம் உள்ளது என்றார் மகாத்மா. ஆனால் இன்று நகர்புறத்திற்கு ஓடிப் போய், கிராமங்களை புறக்கணிக்கும் மனித கூட்டம் நகர்புறத்தை வீங்கச் செய்து, வீணான தாதா வேலைகளில் ஈடுபட்டு கடும் உழைப்பை மறந்து, பிறரது வாழ்வில் தலைப்பட்டு தடியெடுத்தவன் எல்லாம் தண்டல் காரனாகி விடுகின்ற சூழல் அதிகரித்து வருகிறது. நாட்டின் அவலத்தையே காட்டுகிறது.

**எட்டாம் நிலை: கண்ணீரைக் கொடுப்போம்**

இயேசு கண்ணீர் விட்டார்.

வாழ்வின் நிலைகளை பார்க்கும் போது பலருக்கு அழுகை வருவதுண்டு. யெருசலேம் பெண்கள் இயேசுவின் நிலைகண்டு கண்ணீர் வடித்தனர். இயேசு யெருசலேம் நகரை விட்டு வெளியேறி வந்து அதனை பார்த்து அழுதார். பேதுரு தன் நிலையுணர்ந்து, இயேசு சொன்னதையும் நினைத்து அழுதார். பழைய உடன்படிக்கை நூலில், யோசேப்பு, தன் சகோதரர்களின் நிலை கண்டு அழுதார்.

மனிதர்கள் நாம் எந்த நிலையிலாவது நம்முடைய வாழ்வின் ஓட்டத்தில் அழுவது உண்டு. இன்றைக்கு அழுவது என்பது வாழ்வின் கௌரவத்தோடு ஒப்பிட்டு பார்த்து, அழுவது என்பது தரம் குறைந்து விடும் என நினைத்து அழ மறுக்கின்றனர். அழுதால் தன்னை கோழையாக நினைத்து விடுவார்களோ என எண்ணி பல பேர் அழ மறுக்கின்றனர். இதனால் உடலிலே, மனதினிலே கனம் கூடி பல நோய்களுக்கு ஆட்கொள்ளப்படுகின்றோம். என்பதுவே உண்மையாகிறது.

அழுகின்ற பிள்ளை தான் வாழ்வில், தாகம் தீர்த்துக் கொள்ளும். பேதுருவின் கண்ணீர் அவருக்கு மன்னிப்பைத் தேடித் தந்தது. கண்ணீரை கொடுப்போம். உங்களுக்காகவும், உங்களது பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்றார். நம்முடைய வாழ்வின் அவலமான நிலையை மாற்றிக் கொள்ள மாறாக உண்மை அன்புடனே கண்ணீரைக் கொடுப்போம். அதுவே ஒரு வேளை நம்மை சுத்திகரிக்கும்.

**ஒன்பதாம் நிலை: இளைப்பாறுதல் கொடுப்போம்**

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, எல்லாரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன்.

பணிகளை செய்து விட்டு திரும்பிய சீடர்களை பார்த்து இயேசு, படகேறி அக்கரைக்கு செல்லுவோம். சற்றே இளைப்பாறுங்கள் என்றார். மூன்று நாட்கள் தொடர்ந்து தன் செய்திகளை கேட்டுக் கொண்டேயிருந்த மக்களை புல்தரையில் இளைப்பாறுதல் அவசியமானது. தொடர்ந்து ஓடிக் கொண்டே இருக்கின்ற மனிதன் இளைப்பாற வேண்டும் என்றே, ஓய்வுநாளை உருவாக்கினார். 06 நாட்கள் படைத்த இறைவன் ஏழாம் நாள் ஓய்வெடுத்தார் என்கிறது மறை. மனிதனின் இயந்திரத்தனமான வாழக்கையில் இளைப்பாறுதல் அவசியமானதாகிறது.

பணம் பணம் என்று அலைகிற மனிதன் இன்று தானும் ஓய்வெடுக்காது, தன்னிடம் வேலை பார்க்கின்றவர்களையும் ஓய்வெடுக்க விடாது, வருத்திக் கொண்டே இருப்பதை பார்க்கிறோம். இதனால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன. மனிதனின் உடல் நிலை பாதிக்கப்பட்டு பல நோய்களுக்கு ஆளாகின்றான். மனப்புழுக்கத்தால் மன நிலை பாதிப்புக்குள்ளாகிறான். சமூகம் இன்று இதனால் பெரிய பாதிப்புக்குள்ளாகிறது என்பது நிதர்சனமான உண்மை.

இளைப்பாறுதல் மனிதனின் உடல்நலனை பேணச் செய்வதோடு, தொடர்ந்து அவன் உழைப்பதற்கான தெம்பையும், உத்வேகத்தையும் பெற்றுக் கொடுக்க உதவுகிறது. அதனோடு இளைப்பாறும் மனிதன் தன் ஓய்வில் மன அமைதி. மன மகிழ்ச்சி பெற்று பூரண நலம் பெற வழி செய்கிறது.

**பத்தாம் நிலை: ஆடை கொடுப்போம்**

உங்கள் அங்கியை எடுத்துக் கொள்ள விரும்பினால் உங்கள் மேலுடையையும் அவர் எடுத்துக் கொள்ள விட்டு விடுங்கள்.

தேவைக்கு மேல் வைத்திருப்போம் பிறருக்கு உரியதை பறித்திருக்கிறோம். எனவே நாம் திருடர்கள் என்றார் மகாத்மா. இன்று நம் ஒவ்வொருவருக்கும் தேவைக்கு மேல் பல உண்டு. நகைகள், ஆபரணங்கள், உடைகள், என பலவுண்டு. நாம் பதுக்கி வைத்துள்ள காரியங்களால் இன்று பலருடைய வாழ்வில் முதிர் கன்னிகளாக காலத்தை கண்ணீரால் கரைக்கும் மானிடத்தை நாம் கண்டு கொண்டே தான் இருக்கிறோம். எனவே தான் நம்முடைய பாரதத்தில் என்ன இல்லை. எல்லா வளமும் உண்டு. பற்றாக்குறை என்பதுவே இல்லை. பற்றாக்குறை எல்லாம் இங்கு பகிராத குறையே இன்று பாரதத்தைப் பொறுத்த மட்டில் பற்றாக்குறையாக இருக்கிறது.

பணங்கள், சில்லரைகள், ஆடைகள், ஆபரணங்கள், செருப்புக்கள் கூட இங்கு வகை வகையாக, விதம் விதம் ஆக வாங்கப்பட்டு, நாளைக்கு ஒரு சட்டை, உடையென உடுத்துவோர் நம்மில் பலர் உண்டு. வித விதமான வண்ணங்கள் போடுவதற்கு என்று வாங்கி சேர்ப்போரும் நம்மில் பலர் உண்டு. இத்தகைய காரியங்களில் இன்று பணத்தை வாரியிறைக்க முறபடும் நாம், அவற்றை பதுக்கவும் முற்படுகிறோம். பூச்சியும், புழுவும் அரிக்க விடுவோம். திருடன் கன்னமிட்டு திருடவும் செய்கின்றான். ஆனால் மனதார யாருக்கும் எதையும் கொடுக்க முன்வருவதில்லை. சேர்த்து சேர்த்து என்ன லாபம் பெற்றோம். பிறரின் கண்களுக்கு விருந்தளித்து, மற்றவர்களின் வயிற்றெரிச்சலை வாரிக் கொண்டோம் என்பது மட்டும் தான் உண்மை.

**முடிவுரை:**

வாழ்வும், வழியும், உயிருமானவர் நானே என்றவரே.

கொடுப்பதில் தான் எங்களது பேறுடைமை உண்டு என எங்களுக்கு கற்றுக்கொடுத்தவரே. கொடுங்கள். அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி கொடுங்கள். நீங்கள் எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் நானும் அளப்பேன் என்று சொன்னவரே.

தியானித்து இருக்கின்றோம். கொடுப்பதற்கும் எம்மில் பலவுண்டு என எங்களுக்கு உணர்த்தியிருக்கின்றீர். நன்றி கூறுகிறோம். பெற்றவைகளை தாராளமாக கொடுத்து, எங்களது வள்ளல்தன்மையை நிருபிக்க வரம் தாரும். நல்ல நிலத்தில் தூவப்பட்ட விதையை போல கேட்டவைகளை, தியானித்தவைகளை, அசைபோட்டு வாழ்வாக்க வரம் தாரும். வாக்களித்த உம் ஆவியை எம்மில் தங்கிடச் செய்து, அவர் அருள் பெற துணை செய்யும். ஆமென்.


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி ## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. அந்தோனிப்பிள்ளை அலெக்ஸிஸ்



திருமதி. பிலோமினம்மா அலெக்ஸிஸ்

| | | |
|---|---|---|
| 17-07-1935 | அன்னை மடியில் | 23-09-1938 |
| 09-03-2007 | மண்ணினின் மடியில் | 03-10-2008 |

**"இன்றே என்னோடு வான் வீட்டில் இருப்பாய்"**

அன்பும் பண்பும் வழிகாட்டுதலும் நிறைந்த உங்கள் வாழ்வு
என்றும் எம்மனங்களில் நீங்கா நினைவுகளாய் இருக்கும்.

18, புதுமைமாதா கோவில்
கிழக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு மருமகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்

Add: 27/12

## நீங்கா நினைவில் மூன்றாம் ஆண்டு

தோற்றம் 24 - 12 - 1945



மறைவு 05 - 03 - 2009

**சூ. செபஸ்ரியாம்பிள்ளை**

அமைதியின் தெய்வமே இறைவா! எம் வாழ்வின் இலக்கணமும் நீரே போரின் கொடுமையினால் கால்கடுக்க ஓடி அலைந்தோம் கண்முன்னே கண்ட துயர் என்றுமே அழியவில்லை ஆண்டவரே உம் விருப்பம் இதுவென அழுதோம். நாம் பாவியாய் இருந்தாலும் பரமனே உமைநோக்கி அனுதினமும் வேண்டி நின்றோம். அவ்வேளை ஏன் இறைவா என் தலைவன் ஆன்மா தான் உம் விருப்பம் ஆனதுவே. அன்றைய நாட்களில் கொல்லப்பட்ட அனைத்து ஆன்மாக்களுக்காகவும் அனுதினமும் இறைஞ்சி மன்றாடுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

அக்கராயன்
8ம் கட்டை. Add: 22/12 மகன். அருட்திரு. அன்ரனிஜோசவ் I.V.D.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி. மேரி அந்தோனிப்பிள்ளை

மலர்வு 09-06-1946 உதிர்வு 18-03-2011

திருமதி மேரி அந்தோனிப்பிள்ளை (ராணி) ஆண்டொன்று போனாலும் நினைவு ஒன்று மாறாது.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன் மகன், மகள், மருமகள்,
குகர்மன் தாய், அருட்தந்தை டேவிற்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள் அனைவரும்
உங்கள் ஆன்ம சாந்திக்காக
வேண்டி நிற்கிறோம்.

கண்டி வீதி
மிருசுவில்.

# உண்ணா நோன்பா இல்லை உண்மை நோன்பா

முப்பது வருடப் போர் எமது சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களை இன்றும் எமது மக்கள் அனுபவித்து வருகின்றனர். காயங்களோடும் கண்ணீரோடும் ஏழ்மையிலே தொடர்ந்து வாழ்ந்து வருவது



உலகறிந்த உண்மையே. நமது சமூகத்தில் புதிய முகம் கொண்ட (Poor with newfaces) ஏழைகளை போர் பிரசவித்துள்ளது. அண்மையில் நடந்து முடிந்த போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் ஏராளம் உயிரிழப்புகள், உடமைகளின் இழப்புக்கள், உறவுகளின் இழப்பு போன்றவை எமது மக்களின் ஆன்மாவில் அழியாத வடுக்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன. மாற்று வலுவுடையோர், விதவைகள் பெற்றோரை இழந்த சிறுவர்கள், உளநோய் தாக்கத்திற்குள்ளானோர் போன்றோர் எமது சமூகத்தில் தங்கி வாழும் பிரிவினவராக போரினால் உருவாக்கப்பட்டுள்ளனர். இப்பிரிவினருக்கு உதவிக்கரம் நீட்டி நம்பிக்கையூட்டி வாழ வைக்க வேண்டியது எமது சமூகத்தின் தார்மீகக் கடமையாகும். போரை விட, போரின் பாதிப்புக்குள்ளாகி வாழ்வோரை ஆற்றுப்படுத்தி வாழ வைப்பதே பாரிய சவாலாகும். இவர்கள் மட்டில் நமது சமூகம் என்ன செய்யப்போகின்றது? நாம் ஒவ்வொருவரும் என்ன செய்யவேண்டும் என்பதே இத் தவக்காலம் நமக்கு முன் வைக்கும் வினாவாகும்.

### உண்மை நோன்பு பதில் சொல்லுமா?

தவக்காலம் என்றவுடன் எமக்கு உடனடியாக நினைவுக்கு வருவதெல்லாம் சில ஒறுத்தல் முயற்சிகளும், சிலுவைப்பாதையுமே! இவற்றோடு எமது வாடிக்கையான தவக்காலம் ஒருவாறு கழிந்துவிடும். உண்ணா நோன்பு மட்டும் ஒரு மனிதனில் உண்மையான மன மாற்றத்தை ஏற்படுத்தப்போவதில்லை. மரக்கறி நாற்பது நாட்களும் சாப்பிடுவதால் மட்டும் மனமாற்றம் ஏற்படப்போவதிலலை. புறத்தில் நாம் செய்யும் தப முயற்சிகள் , பக்திமுயற்சிகள் தபக்காலத்திற்கான சூழலை ஓரளவு ஏற்படுத்தும் என்பது உண்மைதான்! ஆனால் இத்தகைய தபமுயற்சிகளால் மட்டும் அகத்தில் மாற்றம் ஏற்படாது. இறைவனின் இரக்கத்தையும் அருளையும் நிறைவாக பெற்று பகைமை நீக்கி, தீமையை விலக்கி இறைவனுக்கு உவப்பான வாழ்க்கை வாழ முயற்சிப்பதே நாற்பது நாட்களின் இலக்காக அமைய வேண்டும். வெளியரங்கத்தில் நாம் செய்யும் தப, செப முயற்சிகள் இலகுவானவை. உதாரணமாக தொலைக்காட்சி பார்ப்பதை குறைத்தல். சிகரெட், மது பயன்படுத்துவதை தவிர்த்தல், தீய பழக்கங்களை கைவிடல் போன்றவை நாற்பது நாட்களுக்கு மட்டும் நடைபெறும் செயல்களாக அமைந்தால், உண்மையான உளமாற்றத்திற்கு அவை ஒருபோதும் உதவாது. "பலியை அல்ல இரக்கத்தையே" என்று கூறிய இயேசுவின் வார்த்தைகளை இங்கு நினைவிற்கொள்ளுதல் சாலப் பொருத்தமானது. மனமாற்றம் என்பது வாழ்வு முழுவதும் தொடரும் இறைவனை நோக்கிய ஒரு புதுப்பித்தல் பயணமாகும். அதனை முதன்மைப்படுத்தி நினைவூட்டி பாஸ்கா மறைபொருளை தகுதியுடன் கொண்டாட ஆயத்தமாகும் முகமாக தவக்காலமாக நாற்பது நாட்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனை நாம் உணரும்போதே உண்மை நோன்பாக மாறும்.

## அலசலும் உரசலும் 04

### (சமகால சமூக ஆன்மீக தொடர்)

அருள் முனைவர் ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.

உண்மை நோன்பு அடுத்தவரின் துன்பத்தில் பங்கெடுத்து, உறவுகளை சீராக்கி, பகைமை உணர்வுகளை களைந்து நல்லுறவில் வாழ முயற்சிக்கும் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது எனலாம்.

### ஏழைகளின் வாழ்வும் சிலுவைப்பாதையே

இன்றுபோரின் தாக்கத்தையும் வடுக்களையும் சுமந்து வாழும் எமது சமூகத்தின் புதிய முகம் கொண்ட ஏழைகள் மட்டில் இத்தவக்காலத்தில் என்ன செய்யப்போகின்றோம்? தவக்கால பக்தி முயற்சியாக நாம் செய்யும் சிலுவைப்பாதை ஒவ்வொரு ஏழையினதும் வாழ்க்கை பாதையாகும். ஒரு ஏழைக் குடும்பத்தை அணுகி "நீங்கள் தவக்காலத்தில் நோன்பு கடைப்பிடிக்கின்றீர்களா" என்று கேட்டால் எமக்கு வாழ்வு முழுவதும் அடிக்கடி நோன்புதான் என்று தங்கள் வறுமையை நாசூக்காக சுட்டிக்காட்டுவார்கள். ஆம்! போர் பிரசவித்துள்ள ஏழைகளுக்கு தினமும் நோன்பு தான்! தினம்தோறும் பசியில் ஏழ்மையில் வாழும் வாழ்க்கையே அவர்கள் சுமக்கும் சிலுவைதானே! நாம் சிலுவைப் பாதை பக்தி முயற்சியை தவக்காலத்தில் செய்வது ஆன்மீக பலத்திற்கு நல்லது தான்! ஆனால் எவ்வளவு தூரம் விழுந்து எழுந்து சுமைகளோடு வாழும் முகமில்லா, முகவரியில்லா போரினால் எல்லாவற்றையும் இழந்து சிலுவைகளை சுமக்க முடியாது தள்ளாடுவோருக்கு சீமோன்களாக மாறப் போகின்றோம்! துன்பம் துடைத்து துவண்டு போகும் எமது மக்களுக்கு வரோணிக்கம்மாள் போன்று உதவப்போகின்றோமா? நாம் செய்யும் தப பக்தி முயற்சிகள் வெறும் வாடிக்கையான தப முயற்சிகளாக முடிந்துவிடப் போகின்றதா? சிலுவை சுமக்கும் இயேசுவை ஆராதிக்கும் நாங்கள் இன்று வாழ்க்கை சுமைகளினால் சுகமிழந்து நலமிழந்து வாடுவோரில் இயேசுவை கண்டு ஆராதித்து உதவப்போகின்றோமா? இன்றும் வன்னியில் துன்பப்படும் மக்களுக்கு இயேசுவைப் போன்று உதவிக்கரம் நீட்டி எம்மை ஒறுத்து பகிர்ந்து வாழ முயற்சிக்கப் போகின்றோமா? இதுதானே உண்மையான நோன்பு என்பதை அறிவோமா!

இதுவே உண்மையான சிலுவைப்பாதை

### பகிர்தலே உண்மையான நோன்பு

நெற்றியில் கரி பூசினோம் திருநீற்றுப்புதனன்று! எதற்காக பூசினோம்! எமது கிறிஸ்தவ வாழ்விற்கு கரி பூசவா? கிறிஸ்தவம் சடங்காக மாறிவிட்ட நிலையில் வாழ்க்கை முறையாக மாற்றம்பெற வேண்டுமானால் தவக்காலத்தில் நாம் எம்மிடமுள்ளதை ஏழைகளோடு பகிர்ந்து கொள்வதே சாட்சிய வாழ்வாகும். நாம் வாழும் சமுகத்தில், இடங்களில் எத்தனையோ ஏழைகள் வாழ வழியின்றி வறுமையில் வாடுவதை அறிவோம். இவர்கள் மட்டில் எமது மனநிலை என்ன? இங்கு திருத்தந்தை 16ம் பெனடிக்ற்றின் தவக்கால செய்தியை நினைவு கூருவது பொருத்தமானது. சுயநலமும் அடுத்தவர் மட்டில் இரக்கமுள்ளவர்களாகவும் பகிர்ந்து அன்பிற்கு உயிரூட்டவும் அழைப்பு விடுத்துள்ளார். அத்துடன் சகோதர உறவில்



குறைகளை சுட்டிக்காட்டி ஒருவருக்கொருவர் ஆன்மீக புதுப்பித்தலுக்கும் உதவ வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். என் சகோதரனுக்கு நான் என்ன காவலாளியா? என்ற காயீனின் மனநிலையிலிருந்து விலகி அடுத்தவர் அயலார் மட்டில் இரக்கத்துடன், உதவும் மனப்பாங்குடன் செயற்பட தவக்காலம் அழைப்புவிடுக்கின்றது. உண்மை நோன்பு அன்பில், மன்னிப்பில், இரக்கச்செயல்களில்தான் வெளிப்படுகின்றது என்பதை நாம் உணராத வரைக்கும் இத்தவக்காலமும் எமக்கு வாடிக்கையானதாக சில புற ஒறுத்தல் முயற்சிகளோடு நிறைவுபெறும். இப்படி அமைவதால் தான் கிறிஸ்தவம் சடங்காகவே மாறிக் கொண்டிருக்கின்றது. வாழ்வை தொடாத பக்தி தப முயற்சிகளால் வாழ்வில் மாற்றம் ஏற்படப்போவதில்லை என்பதே கசப்பான உண்மையாகும். உண்ணா நோன்பா? இல்லை உண்மை நோன்பா? தீர்மானிப்போம்! சிந்தித்து செயல்படுவோமா!

(உரசல் தொடரும்)

# திருத்தந்தையின் மூத்த சகோதரர் எழுதியுள்ள புத்தகத்தின் ஆங்கிலப் பதிப்பு வெளியிடப்பட்டது

கடந்த 80 ஆண்டுகளுக்கும் மேலாக, திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களுடன் தனக்குள்ள உறவை விவரித்து, திருத்தந்தையின் மூத்த சகோதரர் பேரருள் தந்தை Georg Ratzinger எழுதியுள்ள ஒரு புத்தகம் மார்ச் 1ம் திகதி ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது.

என் சகோதரர், பாப்பிறை "My Brother the Pope" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளியிடப்படும் இந்த நூல், Michael Hesemann என்ற ஜெர்மன் நாட்டு எழுத்தாளர், அருள்தந்தை Georg Ratzinger அவர்களுடன் மேற்கொண்ட பல நேர்காணல்களின் தொகுப்பாக சென்ற ஆண்டு ஜெர்மன் மொழியில் வெளியாகியிருந்தது.

இயேசு சபையினரால் நடத்தப்படும் இக்னேசியஸ் அச்சகம் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் எழுதிய நூல்களை ஆங்கிலத்தில் வெளியிடும் தனி உரிமை பெற்ற ஓர் அச்சகம். இவ்வச்சகத்தின் மற்றுமொரு நூலாக Georg Ratzinger எழுதிய என் சகோதரர், பாபபிறை இவ வியாழனன்று வெளியிடப்பட்டது.

1927ம் ஆண்டு பிறந்த திருத்தந்தை தனக்கு மூன்றாண்டுகள் முன்பு பிறந்த Georg பற்றி பல நேரங்களில் தன் உரைகளில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார். தனது அண்ணன், பல வழிகளிலும் தனக்கு நண்பராகவும், வழிகாட்டியாகவும் இருந்துள்ளார் என்று திருத்தந்தை இவரைக் குறித்து பேசியுள்ளார்.

1924ம் ஆண்டு பிறந்த Georg Ratzinger, குருத்துவ வாழ்வைத் தேர்ந்தெடுத்து, அவரும் தன் தம்பி Joseph Ratzinger உடன் இணைந்து, 1951ம் ஆண்டு திருநிலைப்படுத்தப்பட்டார். இசையில் அதிக ஈடுபாடு கொண்ட Georg தன் வாழ்வில் 30 ஆண்டுகளைப் புகழ் பெற்ற Regensburger Domspatzen என்ற இசைக்குழுவை வழி நடத்துவதில் கழித்தார். அதே வேளையில், Joseph Ratzinger தன் வாழ்வை இறையியல் படிப்பதிலும் கற்றுத்தேருவதிலும் செலவிட்டார்.

குருத்துவப் பயிற்சியாளராக பல ஆண்டுகள் உழைத்தாலும், திருத்தந்தையின் மனம் எல்லாம் மேய்ப்புப் பணியில் அதிகம் ஈடுபட்டிருந்தது என்பதை என் சகோதரர், பாப்பிறை என்ற புத்தகத்தின் 7வது பிரிவில் விளக்கியுள்ளதாக, Georg Ratzinger, CNA கத்தோலிக்கச் செய்தி நிறுவனத்திற்கு அளித்த சிறப்புப் பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

# கிறிஸ்துவின் கல்லறை கண்டுபிடிப்பு

கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்லறையை ஜெருசலேம் அகழ்வாராய்ச்சியாளாகள் முழுமையாக ஆய்வு செய்ததில், இது யேசு கிறிஸ்துவின் உடல் வைக்கப்பட்ட இடமாக இருக்கலாம் என்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

நவீன அடுக்குமாடி வளாகத்தின் அடியில் அமைந்திருக்கும் இந்தக் கல்லறை, கி.பி.70ம் ஆண்டுக்கு முந்தையதாகக் கருதப்படகிறது. யேசு கிறிஸ்துவின் தொடக்ககாலச் சீடர்கள் இதை அமைத்திருக்கலாம் என்று அகழ்வாராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்லறையில் இருக்கும் சுண்ணாம்புக் கல்லால் ஆன பெட்டியில் "புனித ஜெகோவா விழித்தெழு" என்று கிரேக்க மொழியில் குறிப்பிடப்பட்டிருப்பதை ரிமோட் கனட்ரோல் கமெரா உதவியுடன் ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இதே போன்ற மற்றொரு பெட்டியில் மீனின் வாயில் மனிதன் சிக்கியிருப்பதைப் போன்ற உருவம் பொறிக்கப்பட்டிருககிறது. இது பைபிளில் கூறப்பட்டிருக்கும் ஜோனா என்கிற தேவதூதரின் கதையாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

ஜோனாவை விழுங்கிய பெரிய மீன் அல்லது திமிங்கலம், பிறகு அவரை விட்டுவிட்டதாக பைபிளில் கூறப்பட்டிருக்கிறது. மீனின் உருவத்தை கணணியின் உதவியுடன் பெரிதாக்கிப் பார்த்த போது, அது ஜோனாவின் கதையைப் பிரதிபலிப்பதாக இருப்பது தெரிய வந்தது.

கல்லறைப் பெட்டிகளில் செதுக்கப்பட்டிருக்கும் வாசகம், மீனின் உருவம் ஆகியவை "உயிர்த்தெழுதல்" என்கிற கிறிஸ்தவ நம்பிக்கையைக் காட்டும் வகையில் அமைந்திருப்பதாக கருதப்படுகிறது.

# இளவாலை பங்கில் உறுதிபூசுதல் திருச்சடங்கு

இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் உறுதிபூசுதல் திருச்சடங்கு கடந்த 7ம் திகதி காலை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. திருச்சடங்கில் 126 மாணவ மாணவிகள் உறுதிபூசுதல் திருவருட்சாதனத்தை பெற்றுக் கொண்டனர். இம்மாணவர்கள் பலர் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியையும் திருக்குடும்ப கன்னியர் பாடசாலையையும் சார்நதவர்களாவர். ஏனையவர்கள் துணைப் பங்குகளாகிய யாகப்பர் ஆலயம், யூதா ஆலயம் சார்ந்த பிள்ளைகளாவர். இம் மாணவர்களை முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி. கிறிஸ்தோப்பர் அடிகள் தயார்ப்படுத்தியிருந்தார். திருச்சடங்கு வழிபாடுகளை தற்போதைய பங்குத் தந்தை அருட்பணி. S.J.Q. ஜெயரஞ்சன் அடிகள் நெறிப்படுத்தினார்.

# மறைக்கல்வி ஆண்டினை சிறப்பிக்க யாழ். மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணையம் ஒழுங்கு செய்யும் புனித நாட்டிற்கான திருப்பயணம்

நம் மீட்பரான இயேசுக்கிறிஸ்து வரலாற்றில் மனிதனாகப் பிறந்து வாழ்ந்த இஸ்ராயேல் நாட்டிற்கு திருப்பயணம் செய்ய விரும்புவோருக்கு யாழ். மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணையம் ஒழுங்கு செய்யும் அரிய சந்தர்ப்பம்.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு மீண்டும் திரும்பும்வரை சகல பயண ஒழுங்குகளும் செய்யப்படும்.

இயேசுவின் வாழ்வோடு தொடர்புபட்ட சகல இடங்களுக்கும் செல்லுதல். அனைத்து விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்.

சித்திரை மாத திருப்பயணத்திற்கான பதிவுகளை விரும்பியவர்கள் மேற்கொள்ள முடியும். இத்திருப்பயணம் சித்திரை மாதம் 22ம் திகதி யாழ். பேராலயத்திலிருந்து ஆரம்பிக்கும்.

பயணத் தொகை: ஒருவருககு
ரூபா 170,000 மட்டுமே.

**மேலதிக விபரங்களுக்கு:**
அருட்திரு போல் றொகான்
இயக்குனர்
யாழ். மறைமாவட்ட
சமூகத்தொடர்பு ஆணையம்

(உங்கள் பங்குக் குருக்கள் மூலமாகவும் அருட்திரு போல் றொகான் அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்)

❄ பங்குனி மாத திருப்பயணத்திற்கான பதிவுகள் மற்றும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன. இவர்களின் திருப்பயணம் பங்குனி 17ம் திகதி யாழ். பேராலயத்திலிருந்து ஆரம்பிக்கும்.

**பங்குனி மாதம் 17ம் திகதி புனித நாட்டிற்கான திருப்பயணத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து இணையும் திருப்பயணிகள் இவர்கள்**



# சக்கோட்டை "பங்கு இளைஞர் மன்றம்" அங்குரார்ப்பணம்

கடந்த 22-02-2012 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் சக்கோட்டை புனித சவேரியார் ஆலய மண்டபத்தில் சற்கோட்டைப் பங்குத் தந்தை வணபிதா ம.வி.இ. இரவிச்சந்திரன் அடிகளாரால் சக்கோட்டை பங்கு இளைஞர் மன்றமானது பெருமகிழ்வுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இறை வணக்கத்தினைத் தொடர்ந்து சக்கோட்டைப் பங்குத்தந்தை, வணபிதா ம.வி.இ. இரவிச்சந்தரன் அடிகளார் இளைஞர்களை அன்புடன் வரவேற்று ஆசியுரை வழங்கி கூட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து வண பிதா இரவிச் சந்திரன் அடிகளார் இளைஞர்களின் முக்கியத்துவம் பற்றியும் பங்கு இளைஞர் மன்றத் தேவை பற்றியும் விபரிக்கையில், இளைஞர் மன்றத்தின் வளர்ச்சிக்கு உருவாக்கமும், பணியும் மிக முக்கியமானவை என பல விளக்கங்களினுாடாக வலியுறுததியதுடன், உடல், உள, சமூகம் சார்ந்த செயற்பாடுகளை மேம்படுத்துவதன் மூலம் எமது ஆளுமைகளையும், திறமைகளையும் வெளிக் கொண்டுவர முடியும் எனவும் தெளிவுபடுத்தினார். பின்னர் சற்கோட்டை பொலிகண்டி, உடுப்பிட்டி, ஆலயங்களைச் சேர்ந்த இளைஞர்களின் அறிமுகத்துடன் பணியும், உருவாக்கமும் பற்றி கலந்துரையாடவும் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு தமது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் பரிமாற களம் அமைத்துக் கொடுத்தார். அதன் நிறைவில் பங்கு இளைஞர் மன்ற நிர்வாகத் தெரிவானது மூன்று ஆலய நிர்வாகத்தினரும் இணைந்து கலந்துரையாடல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். விசேடமாக ஆன்மீகம், விளையாட்டு, கலை கலாசாரம், கல்வி பத்திராசிரியர், சமூகப் பொறுப்பாளர், கருத்தரங்கு ஒழுங்கமைப்பு. போன்ற விடயங்களுக்குப் பொறுப்பாகவும் இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் மாதத்தின் முதல் சனி பி.ப. 4.00 மணிக்கு சுழற்சி முறையில் கூட்டம் ஒவ்வொரு ஆலயத்திலும் நடைபெறும் எனவும் கருத்தரங்குகளும், பாசறைகளும் வைப்பதாகவும் முடிவு எடுக்கப்ட்டடு "பங்கு இளைஞர் மன்ற" அங்குரார்ப்பணமானது இனிதே நிறைவு பெற்றது.

பின்னர் இளைஞர்களுடன், பங்குத்தந்தை சக்கோட்டையில பாடசாலை மாணவி படுகொலை செய்யப்பட்ட துன்பகரமான நிகழ்வு பற்றிய கருத்தாய்வினைச் செய்தார் அவ்வேளை சக்கோட்டை பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு இளைஞர்கள் கையில் என வலியுறுத்தினார்.

பின்னர் இவ்வாறான அசம்பாவிதங்களைத் தடுப்பது எமது தலையாய கடமை எனவும் முடிவு செய்து கலந்துரையாடலை நிறைவு செய்தார்.

அனுஜியா. லியோறிஸ்
சக்கோட்டை

# 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு
06 . 11 . 1948



இறப்பு
21 . 03 . 2011

**நீற்றா ஞானதீபம் சுகந்தநாதன்**
**(நிர்மலா)**

இரக்கம் காட்டும் இறைவா! திருமுழுக்கு வழியாக உமது பிள்ளையாக தெரிந்துகொண்ட அமரர். திருமதி நீற்றா ஞானதீபம் சுகந்தநாதன் என்னும் எம் சகோதரிக்காக உம்மிடம் வருகின்றோம். தாம் வாழ்ந்த காலத்தில் செய்த நன்மைத்தனத்தின் பொருட்டு இவரின் குற்றம் குறைகளை மன்னித்து உமது பேரின்ப இல்லத்தில் சேர்த்தருள்வீராக.

19, டேவிற் வீதி
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்
மகன், சகோதரர்கள்

# உண்மையைக் கண்டறியும் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்த இலங்கை ஆயர்கள் வேண்டுகோள்

அரசுத்தலைவரின் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் பரிந்தரைகளை அமுல் படுத்துவதே சர்வதேச குற்றச் சாட்டுகளுக்கு சிறந்த பதிலாக அமையும் என ஆயர் பேரவைத் தலைவர் கர்தினால் மல்கம் இரஞ்சித் மற்றும் செயலர் ஆயர் நார்பர்ட் அந்திராடி கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள், வருங்காலத்திற்கான நம்பிக்கையைத் தாங்கியவைகளாக உள்ளன என்று கூறும் இலங்கை ஆயரின் அறிக்கை, தேசிய ஒப்புரவை நோக்கி மேற்கொள்ளப்படும் முயற்சியில் இப்பரிந்துரைகள் ஒரு நல்ல அடித்தளத்தை வழங்க முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பழைய காயங்களை அகற்றுவதுடன், போரில் பாதிக்கப்பட்டோருடன் ஒப்புரவை உருவாக்குவதன் மூலம் தேசிய ஒன்றிப்பு, அமைதி மற்றும் இணக்க வாழ்விற்குச் சிறப்புப் பங்காற்ற முடியும் எனவும் இலங்கை ஆயர்கள் தங்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.

அமைதியும் ஒப்புரவுமே இன்றைய இலங்கையின் உடனடித் தேவை என்பதை மனதிற் கொண்டு, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை கூறும் பரிந்துரைகளைச் செயற்படுத்த அரசு உடனடியாக முன்வர வேண்டும் என ஆயர்கள் பேரவை மேலும் விண்ணப்பித்துள்ளனர்.

# உலகச் சேவையின் 80வது ஆண்டு : சிறப்பு ஒலிபரப்பு

பிபிசி உலகச் சேவை ஆரம்பிக்கப்பட்டு 80 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, அதன் பன்மொழிச் சேவைகளில் பல சிறப்பு நிகழ்சிகள் தற்போது ஒலிபரப்பாகின்றன.

வத்திக்கான் வானொலி ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டுக்குப் பின், அதாவது 1932ம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஆரம்பமான பிபிசி வானொலி சேவை, தன் 80 ஆண்டு நிறைவை கடந்த கிழமை ஆரம்பித்தது. உலகச் சேவையின் தலை மையகமான புஸ் ஹவுஸ்ன் (Bush House) முற்றத்தில் பெரிய கூடாரம் அமைக்கப்பட்டு, அங்கிருந்து இந்த ஒலிபரப்புகள் நேரடியாக நடத்தப்படுகின்றன.

உலகெங்கும் உள்ள பிபிசியின் நேயர்கள் இந்நிறுவனத்தின் கடந்த கால உலகச் சேவையைத் திரும்பிப் பார்க்கும் வகையில் இந்த நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## பருத்தித்துறை மறைக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மறைக்கோட்டத்திலும், மறைமாவட்டத்திலும் வளவாளர்களாக செயற்பட இவர்களுடைய ஒத்துழைப்பு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

தகவல்: மீரா பருத்தித்துறை

## யாழ் கத்தோலிக்க...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போன்றவற்றை குழு ஆய்வின் மூலம் நெறிப்படுத்தினார். தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் "பெண்கள் ஆய்வு வட்டம்" ஒன்றை அமைத்து மாதாந்தம் கருத்துப்பகிர்வு நடாத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

## அக்டோபர் மாதம்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாண்டு அக்டோபர் மாதம் திருத்தந்தையால் அறிவிக்கப்பட உள்ள விசுவாச ஆண்டு, வரும் ஆண்டு நவம்பர் வரை நீடிக்கும். இந்த விசுவாச ஆண்டின் முக்கிய நிகழ்வாக ஆயர்களின் இந்த மாமன்றம் நடைபெறும்.

## இனிதே நிறைவான..........

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவில இருந்து 4,200 பேரும் இலங்கையில் இருந்து ஆயிரம் வரையானவர்களும் வந்திருந்தனர்.

இந்திய - இலங்கை கிறிஸ்தவ குருமார்கள் இணைந்து திருவிழாத் திருப்பலியை ஒபபுக்கொடுத்தார்கள். இறுதியில் அந்தோனியாரின் திருச்சொரூப பவனியுடன் திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

## பருத்தித்துறை.....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தினை இளம் வளவாளர்களாகிய திரு. கலிஸ்ரஸ், திரு நிசாந் ஆகியோரால் விளக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து கடந்தகாலங்களில் பருத்துறை மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இணைப்பாளராக பணிபுரிந்த அருட்பணி. எமில்போல் அவர்களுக்கு பிரியாவிடை கொடுத்ததுடன், புதிய இணைப்பாளராக அருட்பணி. ஜேம்ஸ்நாதன் அவர்கள் வரவேற்கபபட்டார். இந்நிகழ்வில் 250ற்கும் மேற்பட்ட இளையோர் பங்கு பற்றிமை சிறப்பம்சமாகும்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2012 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.